www.tamilarangam.net


# களத்தில்

ஈழத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் விடுதலை வேங்கைகளாக – வீரப்புலிகளாக – மாறவேண்டும். தாழ்ந்து போன தமிழினம் வீரப்புலி இனமாக மாறவேண்டும்.

*தமிழீழத் தேசியத் தலைவர்*

திருவள்ளுவர் ஆண்டு 2028 (17.06. 1998 ) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (163) அன்பளிப்பு: 60 P


# ஜெயசிக்குறுய் போர்க்களத்தில் திணறும் சிங்கள இராணுவம்

## களமெங்கும் பரவிக் கிடந்த இராணுவ உடல்கள்

**சிங்களப்படைகளை சந்திரிகா - ரத்வத்த குழுவினர் பலிகொடுக்கும் பலிபீடமாக வன்னிப் போர்க்களம் மாறி வருகின்றது. கடந்த 5ம் திகதியிலிருந்து (5.06.98) சிங்களப்படைகள் ஆரம்பித்த ஜெயசிக்குறுய் படை நடவடிக்கைகளுக்கு பலத்த பதிலடி புலிகளால் கொடுக்கப்பட்டுள்ளது.**

ஐந்தாம் ஆறாம் ஏழாம் திகதிகளில் நடந்த சண்டைகளில் பெருமளவு சிங்களத்தின் முன்னணிப் படைகள் அழிக்கப்பட்டுள்ளன ஆயிரக்கணக்கானோர் படுகாயமடைந்து போர்முனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். இச் சண்டைகளில் களமெங்கும் பரவிக்கிடந்த 100க்கும் மேற்பட்ட படையினரின் உடல்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பெருமளவிலான இராணுவ தளபாடங்களும் புலிகளின் கைகளுக்கு வந்துள்ளன.

கிளிநொச்சி, அம்பாகமம், கரிப்பட்டமுறிப்பு, மூன்றுமுறிப்பு என பல முனைகளில் ஜெயசிக்குறுப்படைகள் ஆரம்பித்த படை நகர்வுகள் முறியடிக்கப்பட்டுள்ளன. புலிகளின் பீரங்கிப் படையணிகள், தாங்கி எதிர்ப்புப் படையணிகள் உட்பட்ட பல்வேறு படையணிகளும் களமுனையில் எதிரியின் மனோபலத்தை நொறுக்கி வருகின்றன. இதையடுத்து செய்தித் தணிக்கை மூலம் சிங்கள மக்களின் கண்களை மூட முயலும் அவலம் சந்திரிகா அரசுக்கு நிகழ்ந்துள்ளது.

யுத்தமுனை இழப்புக்களுக்காக மக்களைப் பழிவாங்கும் தந்திரோபாயத்தை தீவிரமாக அமுல்படுத்தி வன்னியில் பெரும் மனித அவலத்தை ஏற்படுத்த சந்திரிகா முயல்வது சுதந்திரபுரம் மனித வேட்டை மூலம் தொடக்கி வைக்கப்பட்டுள்ளது. இங்கு 25க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொன்றொழிக்கப்பட்டு 50 மேற்பட்டோர் படுகாயப் படுத்தப்பட்டுள்ளனர். இக் குண்டு வீச்சுத் தொடர்பாக உலகம் இன்னும் மௌனம் சாதித்து வருவது "இன்றைய உலக

2ம் பக்கம் பார்க்க...



ஜெயசிக்குறுய் போர்முனையில் விக்டர் டாங்கி எதிர்ப்புப் படையணி

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

www.tamilarangam.net



சந்திரிகா அரசு, மீண்டும் தமிழ் மக்கள் மீது மிருகத்தனமான இராணுவப் பழிவாங்கலை மேற்கொண்டுள்ளது. ஜயசிக்குறுய் படைகளைப் பல முனைகளில் நகர்த்த முயன்று தோல்வி கண்ட சந்திரிகா அரசாங்கம், தமிழ்ப் பொது மக்களை இனப்பலி எடுத்து இழப்பில் குலுங்கும் சிங்கள படைகளுக்கு குளிர்ச்சி ஊட்டியுள்ளது

முல்லை மாவட்ட சுதந்திரபுரத்து மக்கள் குடிமிருப்புக்கள் மீது சக்திவாய்ந்த குண்டுகளை கீபிர் விமானம் மூலம் வீசியது சிறிலங்கா படை. அவை வெடித்ததினால் துடித்துக் கொண்டிருந்த மக்கள் கூட்டத்தின் மீது தொடர்ந்து ஆனையிறவு மற்றும் கரிப்பட்டிமுறிப்பு பகுதிகளில் இருந்து மிகமிக மோசமான ஆட்டிலறித் தாக்குதல்களை நடாத்தி அவ் அப்பாவி மக்களை பதைபதைக்க வைத்துள்ளது. அரைமணி நேரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆட்டிலறி செல்களினால் சுதந்திரபுரம், உடையார்கட்டு வடக்கு, மற்றும் வல்லிபுரப் பகுதிகள் அதிர்ந்துள்ளன. 20க்கும் மேற்பட்ட பொது மக்களின் இன்னுயிர்கள் சந்திரிகா அரசால் குடிக்கப் பட்டுள்ளன. 50 க்கு மேற்பட்ட பொதுமக்கள் படுகாய முற்று அந்தச் சிறு கிராமங்கள் தமிழ் இரத்தத்தில் தோய்ந்து போயுள்ளன. ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று இளம் தமிழ்க் கண்மணிகள் சிங்களக் குண்டு வீச்சில் அங்கம் அங்கமாகப் பிய்த்தெறியப்பட அந்தச் சிறு குழந்தைகளின் ஏழைத் தந்தை இரவு பகலாக கூலி வேலைகள் செய்து அந்தச் சின்னஞ் சிறுசுகளை வளர்த்த கைகளினால் அவைகளின் அங்கங்களை அள்ளிக்குவித்து எந்தக் குழந்தையின் உடல் உறுப்பு எதுவெனத் தேடி துடிதுடித்து அழுத சோகக் காட்சி கண்டவர் நெஞ்சங்களைப் பிளந்தெறிந்துள்ளது. கேட்கும் எம் நெஞ்சை உருக்காமலா விடும்?

நாமும் துடிக்கின்றோம். தமிழீழ மண்ணில் சந்திரிகாவின் ஆக்கிரமிப்பு இராணுவம் செய்யும் கொடுமைகள் எம்மைக் கொதிப்படையச் செய்கிறது. ஆனால், நாம் வாழ் இடங்களின் தனிமைகள், பொருளாதார நெருக்கடிகள், நேரமின்மைகள் நாம் இது குறித்து ஆற்ற நினைக்கும் செயற்பாடுகளின் வேகத்தைக் குறைத்து விடுகின்றன. இதனால் எமது உதவிகளால் விரைவில் முடிக்கப்பட வேண்டிய போர் நீளும் பொழுது சந்திரிகா அடுத்த தமிழினப் படுகொலை அத்தியாயத்தை எழுதிவிடுகின்றார். தமிழீழம் முழுவதிலும் குறிப்பாக வன்னிப் பகுதி மக்கள் சந்திரிகா அரசினால் அவர்களது நம்பிக்கைகள் கருத்துக்களுக்காக தண்டிக்கப்படுகின்றார்கள். இது பயங்கரமான சர்வதேசக் குற்றச் செயல். மக்கள் மீதான படையெடுப்புக்கள் சர்வதேச சட்டங்களினால் தடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் தமிழீழமெங்கும் அதுவே சந்திரிகா அரசின் ஆட்சி சாதனமாக்கப்பட்டுள்ளது. யுத்தம் தான் தீர்வு என்றால் அது வெளிநாட்டுப் பிரச்சினையின் பண்பு. இதுவே ஒரு பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினையா? வெளிநாட்டுப் பிரச்சினையா? எனத் தீர்மானிப்பதற்கான இலகுவான அடையாளம் என்கிறார் பிரித்தானியாவின் சர்வதேச தொடர்புகள் ஆய்வாளர் சங்கத் தலைவர் பேராசிரியர் கிறிஸ்ரி பிறவுண். சந்திரிகா உள்நாட்டில் யுத்தத்தையே தமிழர் பிரச்சினையின் ஒரே தீர்வாக முன்னெடுத்துக் கொண்டு அதனை வெளிநாட்டுப்



## உடன் கைகொடுப்போம்

பிரச்சினையாக உலக மக்களை தலையிட்டு தீர்க்க முடியாதபடி அரசியல் தீர்வு பொதி பொட்டலத்தை உலகுக்கு காட்டி உலகை ஏமாற்ற முற்பட்டார். கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்கு என்ற கதையாக அவருடைய சகபாடிகளே அது கைகூடாக் காகிதக் கட்டு என உலகுக்கு உணர்த்தி விட்டனர்.

இதனால் உலகமன்றம் தமிழீழத் தேசத்தின் வரவுக்குப் பாதை திறக்கு முன்னதாக சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு தமிழர் தாயகத்தில் பாதை திறந்து விட வேண்டும் என்ற ஆக்கிரமிப்பு எண்ணத்தால் உந்தப்பட்டு, அந்தப் பாதை திறந்தால் வெற்றி நிச்சயம் என நிர்ணயித்து, குடும்ப விவகாரமாக தன் கணவன் நடித்த வெற்றிப்படத்தின் பெயரான ஜயசிக்குறுய் என்ற இராணுவப் பெயரீட்டுடன் தொடங்கிய ஆக்கிரமிப்பு, விடுதலை உணர்வுடன் விளையாடுவது நெருப்புடன் விளையாடும் வில்லையாட்டு என்பதை அவருக்கு உணர்த்தி நிற்கிறது. ஆனாலும் இராணுவமாக அனுப்பி வைக்கப்பட்டு சாகடிக்கப்படுவது தன் குடும்பம் அல்ல என்ற அலட்சியத்துடன் சிங்கள மக்களின் வறுமையைத் தனக்கு ஆதாயமாகக் கொண்டு சிங்கள இளைஞர்களை இராணுவமாக அனுப்பி உயிர்ப் பலி கொடுத்துக் கொடுத்து பாதை திறக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறார்.

இராணுவம் வெளியேற்றப்படும் வரை இது தொடர்கதையாகத் தொடரப் போகின்றது. ஒவ்வொரு முறையும் தோல்வியின் ஆற்றாமைகள் தமிழ் மக்கள் மீதான பழிவாங்கல்களாக மாற்றப்படப் போகின்றன. எங்கள் சொந்தங்கள் செத்தழிக்கப்படப் போகின்றன. எங்கள் பந்தங்கள் பரிதவிப்பதைக் கேட்டு நாமும் வேதனைப்பட்டுப்பட்டு நடைப் பிணங்களாக தவிக்கப் போகின்றோம். இதை போக்க ஒரே வழி சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தை வெளியேற்ற எல்லா வகைகளிலும் விடுதலைப்புலிகளுக்கு உடன் உதவுவது ஒன்றே. இதில் எவ்வளவு இதய சுத்தியுடன் ஈடுபடுகின்றோமோ அவ்வளவு சீக்கிரத்தில் எமது மக்களின் விடிவுக்குப் பாதை திறக்கும். எமது சொந்தங்களின் பாதுகாப்பு எமது கைகொடுப்பில் தங்கி நிற்கிறது. இதில் ஏற்படும் காலதாமதங்கள் எதிரி தமிழீழ மக்களை மட்டுமல்ல புலம்பெயர் தமிழர்களையும் உருக்குலைப்பதற்காகப் போட்டுள்ள திட்டங்கள் அரங்கேற கால அவகாசம் அளித்து விடும். யுத்தம் எல்லை கடந்த யுத்தமாக விரிந்து விட்டது. சிங்கள ஆக்கிரமிப்பு அரசாங்கம் தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்களை எதிரிகளாகக் கருதிச் செயற்பட்டு வருகின்றது. இந்நிலை புலம்பெயர் தமிழர்களுக்கு பல வாழ்க்கை இடையூறுகளாக மாற்றப்படுமுன் நாம் சிங்கள சிறிலங்காவின் விஷக் கொடுக்கினை உடைக்க வேண்டும். ஆகவே நமக்காகவும் நம் மக்களுக்காகவும் நம் தேசத்திற்காகவும் உடன் உதவிக்கரம் கொடுத்து சத்தியம் தர்மம் வெற்றிபெற வைத்து அனைத்து தமிழருக்கும் அமைதி வாழ்வு தோன்ற உழைப்போமாக!

★★

## உங்கள் தொடர்புகட்கு

**AUSTRALIA**
TCC
P O Box 375
Preston
Victoria 3072

**CANADA**
WTM
64 Eaton Avenue
Toronto
Ontario M4J 2Z5

**DENMARK**
LTTE
P.O.Box 47
7400 Herning

**FRANCE**
TCC
341 Rue Des Pyrenees
75020 Paris

**GERMANY**
TCG
Handel Str - 02
41189 Monchengladbach

**ITALY**
TCC
Via Mariano Stabile - 49
90139 Palermo

**NETHERLANDS**
TCC
Grt. Hertoginnelaan-106
2517 EL Den Hagg

**NORWAY**
TCC
P.O.BOX 1699 Vika
0110 Oslo

**SWEDEN**
TCC
Glomminge Grand-25
3rd Floor
16362 Spanga

**SWITZERLAND**
WTTC
Joses Str - 110
8005 Zurich

**UNITED KINGDOM**
UTO
Eelam House
202 Long Lane
London SE1 4QB

**U.S.A.**
W.T.C.C
170-10 Cedarcroft Road
Suite 1-L
Jamaica
New York 11432.

*1ம் பக்கத் தொடர்ச்சி...*

மானது மனித நீதி என்ற அச்சில் சுழலவில்லை" என்ற தேசியத் தலைவரின் கூற்றுக்கு சாட்சியமாகின்றது.

தலைவர் பிரபாகரனின் திட்டமிடலிலும் வழிகாட்டலிலும் புதிய மரபுரீதியான இராணுவமாகப் பரிணாமம் பெற்றுள்ள புலிகள் ஜெயசிக்குறுய் படைகளுக்கு தொடர்ந்தும் சிம்ம சொப்பனமாக இருந்து வருவர். ஆமினும் தனது அரசியல் நோக்கங்களுடன் பின்னிப் பிணைந்துள்ளதால் சந்திரிகா அம்மையார் தொடர்ந்தும் ஜெயசிக்குறு நடவடிக்கையைத் எப்பாடுபட்டேனும் தொடரவே விரும்புவார். தமிழ் மக்கள் மீதான வன்முறைகள், குறிப்பாக வன்னியில் உள்ள மக்கள் மீது தொடர்ந்தும் கட்டவிழ்த்து விடப்படக்கூடிய நிலைமைகள் உள்ளன.

இந்நிலையில் வன்னியில் வெற்றியை பூரணமாக எமதாக்கவும் சிங்கள அரசு எம்மக்களுக்கு இழைக்கும் கொடுமைகளை சர்வதேச அரங்கில் தட்டிக் கேட்கவும் அனைத்துலகத் தமிழீழ மக்களின் பங்களிப்பு அவசியமாகின்றது. இந்த வரலாற்றுப் பங்களிப்பைத் தமிழீழம் உரிமையோடு எதிர்பார்த்து நிற்கிறது. இதைத்தான் "அனைத்துலகத் தமிழீழ மக்களாகிய நீங்கள் எமது போராட்டத்திற்குத் தோள் கொடுத்து உதவினால் நாம் இந்தப் போரில் வெற்றி கொள்வதும் உறுதி, எமது தாயகம் மீட்கப்படுவதும் உறுதி, நாம் தன்னாட்சி பெறுவதும் உறுதி" எனத் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் அனைத்துலக நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழீழ மக்களுக்கு ஆற்றிய சிறப்புரையில் குறிப்பிட்டார்.

## செய்திச்சரம்

### தமிழகத்தில் பெருகும் ஆதரவு

கடந்த 10ம் திகதி (10.06.98) ஐந்து தமிழக கட்சிகள் இலங்கையில் தமிழர் தாயகத்திலிருந்து படைகளை விலக்குமாறு சிறிலங்கா அரசை நிர்ப்பந்திக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் திரு வாஜ்பாய் அவர்களைக் கோரியுள்ளன. அ.இ.தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க மற்றும் தமிழக ராஜீவ் காங்கிரஸ், ஜனதாகட்சி ஆகிய கட்சிகளே கூட்டாக இவ்வேண்டுகோளை விடுத்துள்ளன.

இதேவேளை சிறிலங்கா மீது பொருளாதாரத் தடை விதிக்குமாறு இந்திய மத்திய அரசைக் கோ... தமிழகத்தைச் சேர்ந்த இரு வர்த்தகப் பிரமுகர்கள் புதுடில்லியை நீண்ட சைக்கிள் பயணம் மூலம் வந்தடைந்துள்ளனர்.

### லெப். கேணல் அன்பு அவர்களின் இறுதி நிகழ்வு

கடந்த 10ம் திகதி (10.06.98) வீரச்சாவடைந்த லெப். கேணல் அன்பு அவர்களின் புகழுடல் முழு இராணுவ மரியாதைகளுடனும் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் 12.06.98 வெள்ளியன்று விதைக்கப்பட்டது. பெருந்தொகையான மக்கள் தமது இறுதி வணக்கத்தைச் செலுத்துவதற்காக அவரது உடல் வைக்கப்பட்டிருந்த நவம் அறிவுக் கோட்டம் அரங்கிற்கு வருகை தந்திருந்தனர்.

### 4 பொதுமக்கள் கொலை

மன்னாரில் 4 பொதுமக்கள் சிங்கள இராணுவத்தால் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். திரு பழனியாண்டி, திரு செல்லத்துரை செல்வரட்ணம், திரு மாரிமுத்து செல்வகுமார், திரு முனியாண்டி இராமையா ஆகியோரே இவ்வாறு கொல்லப்பட்டவர்களாவர்.

www.tamilarangam.net



# சந்திரிகா அரசின் இராணுவ நலனும் தமிழ் மக்களின் அவல வாழ்வும்

Liberation Tigers Of TAMIL EELAM

## புலிகளின் குரல்

சிங்களவர் நலன்களையும், சிங்கள பௌத்த பேரினவாதத்தின் அபிலாசைகளையும் பராமரித்து பாதுகாப்பதை மட்டுமே சந்திரிகா அரசாங்கம் தனது தலையாய கடமையாகக் கொண்டுள்ளது.

தமிழ் மக்களது அன்றாட வாழ்க்கையின் அவசியத் தேவைகளை அனுபவிக்க அவர்களை அனுமதிப்பதா! இல்லையா! என்பதை இராணுவ நலன் என்ற தராசில் வைத்து மதிப்பிட்டபின்பே சந்திரிகா அரசாங்கம் முடிவெடுக்கின்றது.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர் தாயகத்தில் நடைபெறும் கைதுகள், சோதனைச் சாவடி வாழ்க்கை, சுற்றிவளைப்புகள், பிரயாணக் கெடுபிடிகள் என்பன சிங்களத்தின் இராணுவ நலனைப் பிரதிபலிப்பவையாகவே உள்ளன. அத்துடன், தனது இராணுவ அபிலாசைகளைக் கருத்திற்கொண்டே, தமிழ் மக்களின் விவசாய, கடல்சார் உற்பத்திகளுக்கான உள்ளீடுகள் மற்றும் உபகரணங்களின் தடையும் அமைந்துள்ளது. இப்போது யாழ்ப்பாணத்தில் அரச உத்தியோகம் வழங்கலிலும் இராணுவச் சிபார்சே முக்கியான தகுதியாத் தேவைப்படுகின்றது என்று அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

ஆக்கிரமிப்பு ஆட்சியில் மட்டுமல்ல தென் இலங்கையிலும் – குறிப்பாக கொழும்பு மாநகரிலும் தமிழர்களின் வாழ்க்கை முற்றுமுழுதாக சிங்களத்தின் இராணுவ நலனுக்கு உட்பட்டதாக மாறிவருகின்றது. அங்கே தமிழர்கள் கூண்டோடு கைது செய்யப்படுவதற்கும், பால், வயது வேறுபாடுகள் இன்றி–பண்பாட்டு மரபுகளை உதாசீனம் செய்து, நாய் பிடிப்பதுபோல தமிழர்கள் நடாத்தப்படுவதற்கும், **முதலில் இராணுவ நலன் பின்பே மற்றவை** என்ற சந்திரிகா அரசாங்கத்தின் கொள்கை நிலைப்பாடே பிரதான காரணியாகும்.

இந்த நிலைப்பாடு காரணமாக தமிழ் மக்கள் என்று வரும்போது சட்டங்கள் – தர்மங்கள் – பொது வழமைகள் – இங்கித அணுகுமுறைகள் காலில் போட்டு மிதிக்கப்படுகின்றன. இதனால் என்றுமில்லாத வகையில் தமிழர்களின் வாழ்க்கை அவலம் நிறைந்ததாக மாறிவருகிறது. இன அடையாளத்தின் அடிப்படையில் தமிழர்கள் இழிவுபடுத்தப்படுகின்றனர். சுருக்கமாகச் சொன்னால் இன்று கொழும்பு வாழ் தமிழர்கள், கிட்லர் கால ஜேர்மனியின் யூதர்கள்போல நடாத்தப்படுகின்றனர்.

ஒவ்வொரு நிமிடமும் சர்வதேசத்தின் பார்வையில் பட்டபடியுள்ள தலைநகரில் தமிழர்களுக்கு இந்நிலையென்றால் வெளிநாட்டார் நுழையமுடியாத– பத்திரிகையாளர்கள் செல்லமுடியாத இராணுவ ஆக்கிரமிப்புப்பகுதிகளில் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதை ஒருவர் ஊகித்தறியமுடியும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற பேச்செழும்போது அதற்கான தீர்வு யோசனைகளை இராணுவத் தராசில் வைத்தே சந்திரிகா அரசாங்கம் மதிப்பிடுகின்றது. தமிழர் தரப்பிலிருந்து எழும் ஒவ்வொரு சாதாரண கோரிக்கையும் இராணுவத் தராசில் எடை பார்க்கப்பட்டே முடிவு சொல்லப்படுகின்றது.

அன்று, அம்மையாருடன் நடந்த அமைதிப் பேச்சுக்களின்போது பூநகரி முகாமை மூடி குடாநாட்டிற்கு சுதந்திரமான பிரயாணப் பாதையொன்று திறக்க உதவுமாறு கோரியபோது–வெளிப்படையாகவே– தனது இராணுவ நலனைக் காரணம் காட்டி அரசாங்கம் மறுத்துவிட்டது. ஆனால் இன்று அதே இராணுவ நலனுக்காக குடாநாட்டுக்கு பாதை திறக்க அதே அரசாங்கம் முயற்சி எடுத்துவருகின்றது.

குடாநாட்டுக்கு தரைப்பாதை திறக்க வன்னியில் ஒருபாரிய படையெடுப்பை நடாத்திக்கொண்டிருக்கும் அதேவேளை, மட்டக்களப்பு–கொழும்பு தரைப்பாதையை மூடிவிட அங்கே ஒரு படைக்குவிப்பை சந்திரிகா அரசாங்கம் செய்துள்ளது. எதிரும் புதிருமான இந்த இரண்டு நோக்கங்களுக்கும் சிங்களத்தின் இராணுவ நலனே முழுமுதற்காரணியாகும்.

'போர் மூலம் சமாதானம்' என்ற அம்மையாரின் கருத்துருவமும் இராணுவ நலனை அடிப்படையாகக் கொண்ட ஒரு அடக்குமுறைச் சித்தாந்தமேயாகும்.

சிங்கள–பௌத்த பேரினவாதத்தின் இராணுவ நலனானது, தமிழரின் தேசிய வாழ்வை அழிக்க முயல்வதையும்– தமிழ் மக்களின் அன்றாட வாழ்வைச் சிதைத்து வதைப்பதையுமே இலட்சியமாகக் கொண்டது. இராணுவ நலனுக்கு முன்னுரிமை கொடுத்தபடி தமிழரின் தேசிய இனப்பிரச்சினைத் 'தீர்க்க' முயலும் சிங்கள அரசின் எந்த ஒரு முயற்சியையும் புலிகள் இயக்கம் அனுமதிக்கமாட்டாது. ★

## தாய்மைக்குத் தெரியும்

### விடுதலையின் முகம்!

புதல்வர்கள் இல்லாமல்
திரும்பும் புரவிகளில்
விழிகளை குவித்து
இவள்
யுகம் யுகமாய் நிற்கிறாள்.
பழைய புறநானூற்று
வரிகளிலும்
இன்றைய நீக்ரோவின்
பாடல்களிலும்
அந்தப்
பெரு மூச்சின் வெப்பம்
இன்னும் தொடர்கின்றது.
எல்லைகள் கடந்தது
இவளின் கண்ணீர்।

சந்தடி செய்யாமல்
புறப்பட்டுப் போனவன்
படுத்திருந்த பாய்
இன்னும்
விரித்தபடி கிடக்க –
பிடரி மயிரை
நீவிய விரல்கள்
பாயின் கோரை வரிகளைத் தடவும் –
அவன் மேனியில் அழுந்திய
கோரை வரிகளில்
அவனைத் தரித்த
கருப்பைச் சூடு
மூடிக் கிடக்கும்.
எல்லாக் கதவையும்
விடுதலையின் கரங்கள்
தட்டும் ஓசை
தங்களுக்கு மட்டும்
கேட்கும் என்று
பாயில் புரளும்
புதல்வர்கள் நினைக்கிறார்கள்.
ஊருக்குள் பிரவேசிக்கும்
விடுதலையின் முதற்சுவடு
யாருக்கும் முந்தி
இவளுக்குக் கேட்கும்.
ஒவ்வொரு தாய்க்கும்
விடுதலையின் முகம் தெரியும்.
கட்டுகள் அறியாத
காலத்தில்
தாய்மை அவளுடன்
கைகோத்திருந்தது.
தாய்மைக்கு வாய்த்த
பிரபஞ்ச முதற் தோழி
விடுதலைதான்.

உனது நொடிகளை
ஏந்திய துப்பாக்கியிலும்
தனது அமரத்துவத்தை
அணிந்த சயனைட் குப்பியிலும்
நிச்சயித்தபடி நிற்கும் இவன் –
"யாரென்று வினவுவீராயின்"
இவன் சேய்
நான் தாய்
எமது இல்லம்
புலி பிறந்து வளர்ந்த குகை.

பாசாங்கு செய்யாதே।
கிளியின் சிறகுகளை
முறிக்காதவன் போலவும் –
புறாவின் மார்பைத்
துளைக்காதவன் போலவும் –
எம் மண்ணில்
நுழையு முன்பே
எவரது குருதியால்
கறைபட்டுப் போயின
உனது கொடிகள்?
விரிந்து செல்லும்
உனது நெருப்பால்
எரிந்த குருவிக் கூடுகள்
எத்தனை
எத்தனை?
புரியுமா உனக்கு?
நீட்டிய உனது
துப்பாக்கிக்கு முன்பு
வற்புறுத்தப்பட்ட
கேடயங்கள் அல்ல யாம் –
பருந்தை எதிர்த்துக்
கோழி சிறகை விரிப்பது
குஞ்சுகள் கூடி
மிரட்டுவதாலா?
நிற்கும் நாங்கள்
பத்து மாதம் சுமந்த
கர்ப்பப்பைகள்.
முடிந்தால் கிழித்துக் கொள்
மறுபடியும் மறுபடியும்
பிரசவிப்போம்.

கவிஞர். இன்குலாப்

www.tamilarangam.net



★ **30-05-98** அன்று மட்டக்களப்பு - அம்பாறை எல்லைப் பகுதியான மகா ஓயாவில், அறந்தலாவ என்ற இடத்தில் சிங்கள இராணுவ அணியொன்றின் மீது புலிகள் அணியொன்று வழிமறித்துத் தாக்கியதில் 5 இராணுவத்தினர் கொல்லப் பட்டுள்ளனர். காயமடை ந்தவர்களைத் தூக்கிக் கொண்டு ஏனையோர் தப்பி யோடி விட்டனர். இதில் விடுதலைப் புலிகள் தரப்பில் எவ்வித சேதமும் இல்லை.

இதே நாளில் யாழ். குருநகர் சவக் காலைச் சந்தியில் இராணுவ நிலை மீது புலிகள் கைக்குண்டு தாக்கு தல் நடத்தியதில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டு சிலர் காயமடைந் தனர்.

★ யாழ். மட்டுவில் கிழக்கில் **31-05-98** அன்று இராணுவ நிலை மீது புலிகள் கைக்குண்டு தாக்குதல் நடத்தினர். இதில் ஒரு இராணுவத்தினன் கொல்லப்பட்டு நால்வர் காயமடைந்தனர். இதே வேளை வரணியில் இராணுவச் சோதனைச் சாவடி மீது நடத்தப் பட்ட தாக்குதலில் 3 இராணுவத் தினர் படுகாயமடைந்தனர்.

இதே நாளில் மட்டக்களப்பு எல்லைப் பகுதியில் சிங்கள இராணுவ அணி யொன்று புலிகளின் அதிரடித் தாக்கு தலுக்கு இலக்காகியது. 7 இராணு வத்தினர் அவ்விடத்திலேயே பலியாக, ஏனையோர் ஓடித் தப்பித்துக் கொண்ட னர். இதில் புலிகள் தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

★ **03-06-98** அன்று எழுது மட்டுவாள் பகுதியில் சிங்கள இராணுவ பேருந்து வண்டியொன்று விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டுள்ளது. இதில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டு 12 பேர் காயமடைந்துள்ளனர். இதே நாளில் காலை வேளை வீதித் தடை யகற்ற புறப்பட்ட இராணுவ அணி மீது புலிகள் நடத்திய தாக்குதலில் 3 இராணுவத்தினர் கொல்லப்பட, ஏனை யோர் ஓடித் தப்பித்தனர். புலிகள் தரப்பில் எவ்வித சேதமும் இல்லை.

★ **05-06-98** அன்று மூன்று முறிப்பிலும், அம்பகாமம் பகுதியிலும் சிறிலங்காப் படையினர் தரை நகர்வை மேற்கொண்டனர். இங்கு விடுதலைப் புலிகளிடம் பலத்த அடி வாங்கிய சிங்களப் படை தனது முன்னைய நிலைக்கே திரும்பியது. இதில் 6 இராணுவத்தினரின் உடல்கள் விடுத லைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. ஒரு விடுதலைப் புலிவீரர் வீரச்சா வடைந்துள்ளார்.

மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலில் 20க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 8 இராணுவத்தினரின் உடல்கள் கைப்பற்றப்பட்டன. 11 விடுதலைப் புலிவீரர்கள் வீரச்சாவடைந் துள்ளனர்.

பிற்பகல் 2.30 மணிக்கு மற்றொரு நகர்வும் முறியடிக்கப்பட்டது. இதில் இராணுவத்தினரின் 6 உடல்கள் கைப்பற் றப்பட்டன. ஒரு விடுதலைப் புலி வீரர் வீரச் சாவடைந்தார்.

இதேதினத்தில் யாழ். கைதடியில் இராணு வக் காவலரண் ஒன்று விடுதலைப் புலிகளால் தாக்கப்பட் டுள்ளது. அவ் விடத்திலேயே 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இருவர் காய மடைந்தனர்.

மேற்பட்ட பத்து நாட்களில் 250 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டும் 600க்கும் மேற் பட்டோர் காயமுற்றனர் என செய்தி கள் வெளியாகின.




★ **04-06-98** அன்று கிளிநொச்சிப் பகுதியில் தரைநகர்வை மேற்கொண்ட சிங்களப் படைகள் மீது புலிகள் பாரிய தாக்குதலைத் தொடுத்தனர். சிங்களப் படைக்கு பெரும் உயிரிழப்பும் ஆயுத இழப்பும் ஏற்பட்டுள்ளது. 100க்கும் மேற்பட்ட படையினர் அவ்விடத்திலே யே கொல்லப்பட்டனர். பல நூற்றுக் கணக்கானோர் காயமடைந்தனர். இதில் 51 சிங்களப் படையினரின் உடல்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. 42 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

★ **07-06-98** அன்று மாங்குளம் நோக்கி நகர்வை மேற்கொண்ட சிறீ லங்காப் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர். அதில் பத்துக்கும் மேற்பட்ட இராணுவத் தினர் கொல்லப் பட்டனர். மூவரின் உடல்களை புலிகள் கைப்பற்றினர். 9 விடுதலைப் புலிவீரர்கள் வீரச்சாவடைந் துள்ளனர்.

இதே நாளில் காலை 9 மணிக்கு அம்பகாமம் நோக்கிய நகர்வை மேற் கொண்ட படையினர் மீது தாக்குதல்

★ **09-06-98** மீண்டும் ஒரு நகர்வு கிளிநொச்சிப் பகுதியில் மேற்கொள்ளப் பட்டது. விடுதலைப் புலிகளின் உக்கிர மான தாக்குதலில் 75க்கும் மேற்பட்ட சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர். 200க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். பல நவீனரக ஆயுதங்கள் உட்பட இராணு வத்தின் 29 சடலங்களும் புலிகளால் கைப் பற்றப்பட்டன. விமானத் தாக்குதல், ஷெல், டாங்கித் தாக்குதல்களுடன் ஆமிரக்கணக கில் புறப்பட்ட இராணுவத்தினரையே புலிகள் விரட்டியடித்துள்ளனர். இத் தாக்கு தலில் 27 புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.


---

★ "புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் ஒரு மரபுரீதியான இராணு வமாக வளர்ச்சியடைந்து விட்டதை முக்கியமான வெளிநாட்டு இராணுவ அதிகாரிகளே ஏற்றுக்கொள்கிறார்கள். குறிப்பாக இந்த வன்னிக்களத்தைப் பொறுத்தவரை, இரண்டு பகுதியும் ஷெல்களைப் பாவிக்கின்ற ஒரு நிலை யும், மரபுரீதியான போர் அணுகுமுறை களையும் கையாண்டு போரிடுவதையும் காணக்கூடியதாக உள்ளது. இதில் குறிப் பிடப்பட வேண்டிய விடயம் என்ன வென்றால், வருடத்திற்கு வருடம் புலி கள் படைகள் மீது ஏற்படுத்துகின்ற பாதிப்பின் அளவு கூடி வருகின்றது என்பது மிகமிக முக்கியமான, ஆனால் பலரும் கவனிக்கத் தவறுகின்ற ஒரு உண்மை. அதாவது, புவியியல் ரீதியாக யாழ்ப்பாணம் என்ற ஒரு இடத்தை (இராணுவம்) கைப்பற்றியிருக்கலாம் அல்லது மன்னாருக்கான அந்தப்பாதை யை கைப்பற்றியிருக்கலாம். இவ்வாறு சில கைங்கரியங்களை இலங்கைப் படைகள் செய்திருந்தாலும், இலங்கைப் படைகளால் புலிகளிலுடைய போரிடும் ஆற்றலை எந்தளவிலும் குறைக்க முடி யவில்லை என்பதும், புலிகள் வருடா வருடமோ அல்லது மாதமாதமோ ஒவ் வொரு கட்டத்திலும் இலங்கைப் படை கள் மீது ஏற்படுத்தக் கூடிய அழிவு கூடிக் கொண்டே போகின்றது என்ப தும் உண்மைகள்."

*- தராகி*
*(இராணுவ ஆய்வாளர் - IBC வானொலிக்கு வழங்கிய செவ்வியில்)*

★ "சர்வதேச செய்தித் தாபனங்களின் மீதான தணிக்கை விடுதலைப் புலிகளை கணனி வலை மூலம் தமது செய்தி களைப் பரப்ப உதவுவது மட்டுமல்லா மல், புதுடெல்லி மற்றும் சிங்கப்பூரிலுள்ள செய்தித் தாபனங்களினூடகவும் அவர் களது செய்திகளைப் பரப்ப பெரிதும் உதவுவதாக, வெளிநாடுகளில் உள்ள சிறிலங்காவின் அமைப்புக்கள் அதிருப்தி தெரிவித்தன. இதனால் விடுதலைப் புலிகளின் செய்திகள், 'அச்சடிக்கப்படும் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களி னூடாக முக்கியத்துவம் பெற்றன."

*- சண்டே ரைம்ஸ் (கொழும்பு) - 14.06.98*




★ "தகவல் சுதந்திரமென்பது சகலரதும் அடிப்படை உரிமையாகும். இதை யாரும் தடைசெய்யவோ கட்டுப் படுத்தவோ கூடாது. அந்தவகையில், புலிகள் இயக்கம் இன்டர்நெற்றில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான பிரச்சாரங்களில் ஈடுபடுவதை தடை செய்ய வேண்டும் என யாரும் கோர முடியாது. தடை செய்யவும் முடியாது."

*- பேராசிரியர் கரிகண்ட்*
*(இலண்டன் கிங்ஸ்டன் சர்வகலாசாலை பேராசிரியர் கொழும்பில்)*

★ சர்வதேச தகவல் தொடர்பு வலைப் பின்னல் மூலம் உலகமே கிராமமாகி விட்ட சூழலில் செய்தித் தணிக்கை மூலம் உண்மைச் செய்திகள் வெளி வராமல் தடுத்துவிடலாம் என்று நினைப்பது ஒருவன் காதைப் பொத்திக் கொண்டு தன்னுடைய குரல் மட்டும்தான் உலகில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது, தான் சொல்வதைத் தான் மற்றவர்கள் கேட்பார்கள் என்று சொல்வதற்கு ஒப்பானது.

*- ஆசிரியர் தலையங்கம்*
*ஈழமுரசு - 11 - 17 ஜூன் 1998*

★ "ஐக்கிய தேசியக் கட்சி முதலாளித்துவ சக்திகளின் ஒரு கூட்டுக்கட்சி. பொதுஜன ஐக்கிய முன் னணி ஏற்படுத்திய போலியான கூட்டு, இடமும் வலமும், முற்போக்கும் இல் லாத முரண்பாட்டு சக்திகளின் வெறும் கூட்டுத்தான்!

பொதுஜன ஐக்கிய முன்னணி பதவியேற்ற காலத்தில் அதிகாரத்தைக் கைப்பற்ற பேசியவை எல்லாம் யதார்த்த அரசியற் களத்தில் வெறுமனே அம்பலப் பட்டு இப்போது யாவுமே நிர்வாணமாகிப் போயுள்ளது.

ஆதியோடு அந்தமாக பார்த்தால், சொல்வதற்கும் செய்வதற்கும் தொடர்பு ஏற்படுத்த முடியாத வகையில் திறந்த பொருளாதாரப் பல்தேசியக் கம்பனிகளின் அடக்குமுறைகளில் முடங்கியிருத்தல், அமெரிக்காவிற்கு கற்பூரம் காட்டுதல், இனஒடுக்குமுறை, தொழிலாளர்களை நசுக்குதல் என்ற எல்லாமே நடை பெறுகின்றன.

இனிமேல் பொதுஜன ஐக்கிய முன்னணி, காப்பாற்ற முடியாத ஒரு 'வெறும் கூத்துக் கொட்டகை' என்ற நிலைமைதான் மிஞ்சியுள்ளது."

*- மாதொருபாகன் (செய்தியாளர்)*
*(தினக்குரல் - 07 ஜூன் 1998)*

5ம் பக்கத் தொடர்ச்சி....

இராணுவம் செயலிழக்கும் அபாயத்திற்கான அறிகுறிகளும் சிங்களத் தலைமைக்குத் தெரியத் தொடங்கியுள்ளன. இதுதான் சந்திரிகா - ரத்வத்த குழுவினரைக் கலக்கமடைய வைத்துள்ளது.

செய்தித் தணிக்கை மூலம் உலகின் கண்களை மூடியபின் மக்களை குறி வைத்து குண்டுவீசிக் கொல்வதென்பது சிங்கள இனவாதிகள் காலம் காலமாக செய்து வந்துள்ளனர். இத்தாக்குதல்கள் தற்செயலாக படைகளினால் நிகழ்த்தப் படுபவை அல்ல. மாறாக, சிங்கள அரசியற் தலைமைகளின் முற்றுமுழுதான ஆதரவு டனேயே இவை நிகழ்கின்றன. சந்திரிகா - ரத்வத்த குழுவினரும் இவ்வாறு ஒரு வெறியாட்டத்தினை முல்லைத்தீவு மாவட் டம் சுதந்திரபுரம் பகுதியில் ஆனி 10ம் திகதி காலை நடத்தி முடித்திருந்தனர். இவ் வெறியாட்டத்தில் 25க்கும் மேற்பட்ட பொது மக்கள் அநியாயமாக உயிரிழந் துள்ளனர். 50க்கும் மேற்பட்டோர் காய மடைந்துள்ளனர். இவை, மக்களை கொலை வெறி வன்முறை மூலம் பய முறுத்தி அடிபணிய வைக்கும் முயற் சியின் உச்சக்கட்டத்தை சந்திரிகா அரசு அடைந்துள்ள நிலைமையையே காட்டு கின்றன.

ஒட்டு மொத்தமாகப் புலிகளை அழித்து அல்லது பலவீனமாக்கி, கண்டி வீதியூடாக யாழ்ப்பாணம் செல்வது என்ற நோக்கத்துடன் பெரும் நம்பிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்ட ஜெயசிக்குறுப் படைகள் மனோபலத்தை இழந்து திண்டாடும் நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. அத்துடன் இந்த ஜெயசிக்குறுவில் நம்பிக்கை வைத்து, அரசியலும் வாழ்க் கையும் நடத்தும் சந்திரிகா - ரத்வத்த குழுவினர் கலக்கமடைந்துள்ள நிலைமை யும் தெளிவாகத் தெரிகின்றது. மக்களின் ஆதரவுடன் சிங்களப் படைகளைப் புலிகளின் படையணிகள், தமிழ் மண்ணில் முறியடிக்கும் காலம் நெருங்கிக் கொண்டி ருக்கிறது. ★

www.tamilarangam.net



# மூச்சுத் திணறும் 'ஜெயசிக்குறுய்' பூதம்

"மீண்டும் இந்த வணங்கா மண்ணில் ஆக்கிரமிப்பாளர்களின் இரத்தம் ஆறாக ஓடவிருக்கிறது. மீண்டும் ஆயிரமாயிரம் அப்பாவிச் சிங்கள இளைஞர்கள் கண்டிப் பிரபுத்துவ வர்க்கத்தின் வரட்டுக் கௌரவத்திற்கும் குருட்டுக் கொள்கைக்கும் பலிக்கடாவாகப் போகின்றார்கள்"

இவ்வாறு வைகாசி மாதம் 13ம் திகதி ஜெயசிக்குறு ஒரு வருட பூர்த்தி நாளன்று, தலைவர் பிரபாகரன் அவர்கள் வழங்கிய செய்தியில் குறிப்பிட்டார். தலைவரின் கூற்று செயல்வடிவம் பெறு வதைக் கட்டியம் கூறுவது போலவே கடந்த சில தினங்களாகக் களத்திலிருந்து கிடைக்கும் செய்திகள் அமைந்துள்ளன.

ஜெயசிக்குறு ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்தபோது சண்டைகள் மாங்குளம் நகரைச் சார்ந்தே மையம் கொண்டிருந்தன. பல மாதங்களாகப் புளியங்குளத்தைக் கைப்பற்றப் பெருமுயற்சி செய்த சிங்களப்படைகள், அதில் வெற்றி பெற முடியாது போகவே, கண்டி வீதிக்கு சமாந்தரமாக காட்டுப்பாதை வழியாகவும் பழைய கண்டி வீதி வழியாகவும் நகர்ந்து, மாங்குளம் - முல்லைத்தீவு வீதியில் உள்ள கரிப்பட்டமுறிப்புப் பகுதியில் நிலை கொண்டன. அத்துடன் கண்டி வீதிக்கு மேற்குப் பக்கமாக புதூர், மன்னங்குளம் பகுதியூடாக புளியங்குளத்தைச் சுற்றி வளைக்கும் முயற்சியும் புலிகளால் முறியடிக்கப்படவே, மேற்குப் பக்கத்தில் ஒரு முயற்சியாக, மாங்குளத்திற்கு தென்மேற்காக கணிசமான தொலைவிலிருக்கும் மூன்று முறிப்புப் பகுதிக்கு படைகள் நகர்ந்தன. கரிப்பட்டமுறிப்பிலிருந்து மேற்காக நகர்ந்து ஒலுமடுவைத் தாண்டி மாங்குளம் நகரை அடைவதற்காக எடுக்கப்பட்ட நகர்வு முயற்சிகள் தொடர்ந்தும் முறியடிக்கப்பட்ட நிலையில், பழைய கண்டி வீதியில் மேலும் வடக்குப் பக்கமாக நகர்ந்து, அம்பாகமம் பகுதிக்கு அருகில் சிங்களப் படைகள் நிலைகொண்டன. இதேவேளை மாசி மாதம் தொடக்கத்தில் புலிகள் கிளிநொச்சி நகரின் முக்கிய மையப்பகுதிகளை மீளக் கைப்பற்ற, கிளிநொச்சியில் இராணுவ நிலைகள் கரடிப் போக்குச்சந்தி நோக்கி கண்டி வீதியில் பின்னோக்கித் தள்ளப்பட்டன. இவைதான் ஜெயசிக்குறு ஒரு வருடப் பூர்த்திக்கு முன்னிருந்த வன்னிக் களநிலைமை.

இந்த ஒரு வருடத்திலேயே ஜெயசிக்குறு படைகளுக்கு மூச்சு முட்டியிருந்தது. இராணுவத்திலிருந்து ஏராளமானோர் தப்பியோடியிருந்தனர். இருப்பவர்களும் தப்பியோடும் மனநிலையிலேயே இருக்கின்றனர். பல்லாயிரம் பெறுமதியான இராணுவத் தளபாடங்கள் இழக்கப்பட்டன. 3500க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட, ஏழாயிரத்திற்கும் மேற்பட்டோர் காயப்பட்டு களத்திலிருந்து அகற்றப்பட்டனர். இவ்வாறு புலிகளுக்கு கடைசிக் குறி வைக்கவென அனுப்பி வைக்கப்பட்ட ஜெயசிக்குறுப் பூதத்திற்கு, மூச்சு வாங்குவதைக் கண்ட அதன் அரசியல் தலைமைக்கு கலக்கம் பிறந்தது.


தப்பியோடியவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதாக அறிவித்து, அவர்களை இராணுவத்தில் வந்து திரும்பவும் இணையுமாறு பலதடவை வருந்தி அழைத்தார் சந்திரிகா அம்மையார். அப்படியும் அவர்கள் வராமல் போகவே, வலுக்கட்டாயமாக அவர்களைப் பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன் கட்டாய ஆட்சேர்ப்புப் பற்றியும் ரத்வத்த பேச ஆரம்பித்தானது, சிங்களத் தலைமையின் கலக்கத்தின் அளவைப் பிரதிபலித்தது. சோர்வடைந்திருந்த படைகளுக்கும் படைத்தலைமைக்கும் உற்சாகமளிக்க, ரத்வத்த வன்னிக்குப் பலதடவை பயணிக்க நேரிட்டது. அத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்தும், கிழக்கிலிருந்தும் மேலும் படைகள் விலக்கப்பட்டு வன்னியில் குவிக்கப்பட்டன.

இந்த ஏற்பாடுகளின் பின் படைகளை மீண்டும் சண்டையிட அனுப்பினர் சந்திரிகா–ரத்வத்த குழுவினர். விளைவு விபரீதமாக இருந்தது. வைகாசி 28ம் திகதி ஜெயசிக்குறுப் படைகள் ஆரம்பித்த நகர்வு முயற்சியே, ஜெயசிக்குறு ஒரு வயதைக் கடந்த பின் எடுக்கப்பட்ட முதல் நடவடிக்கையாகும். கரிப்பட்டமுறிப்பிலும், மூன்றுமுறிப்பிலுமாக ஆரம்பிக்கப்பட்ட இம் முயற்சி, 30ம் திகதி புலிகள் நடத்திய எதிர்த் தாக்குதலுடன் எவ்வித முன்னேற்றமும் இல்லாமலேயே முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இதில் பிரதான நகர்வான கரிப்பட்டமுறிப்பிலிருந்தான நகர்வின் முறியடிப்புத் தாக்குதலில் 50க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட பல நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்து களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர். புலிகளால் 20 இராணுவத்தினரின் சடலங்கள் கைப்பற்றப்பட்டன. பல ஆயுத தளபாடங்களும் கைப்பற்றப்பட்டன.

முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பது போலவே, பின்னர் ஆனி 5ம் நாளிலிருந்து ஜெயசிக்குறுப் படைகள் ஆரம்பித்த நடவடிக்கைகள் யாவும் அமைந்திருந்தன. ஆனி மாதம் 5ம் திகதி, 3 முனைகளில் படைநகர்வை ஆரம்பித்த படைகள் புலிகளின் பலத்த எதிர்ப் பைச் சந்தித்தனர். கிளிநொச்சியில் கரடிப்போக்கு, திருநகர்ப் பகுதிகள் ஊடாக கிளிநொச்சி நகரின் மத்திய பகுதிகள் நோக்கி ஒரு நகர்வும், அம்பாகமம் நோக்கியும் அங்கிருந்து மேற்காக நகர்ந்து மாங்குளத்தைச் சுற்றி வளைக்க ஒரு நகர்வும், மூன்றுமுறிப்பிலிருந்து வடக்காக

## கலக்கமடையும் அரசியல் தலைமை

வந்து மாங்குளம் நோக்கி ஒரு நகர்வுமாக மூன்று பாரிய நகர்வுகள் அன்று ஜெயசிக்குறுப் படைகளால் ஆரம்பிக்கப்பட்டன. புலிகளின் பதில் நடவடிக்கையில் கிளிநொச்சிப் பகுதியில் படைகள் பேரிழப்பைச் சந்தித்தன. 100க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட பல நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர். 51 இராணுவத்தினரின் சடலங்கள் கைப்பற்றப்பட்டன. பல மோட்டார்கள் உட்பட பெருந்தொகை ஆயுத தளபாடங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. அம்பாகமம் பகுதி முறியடிப்புத் தாக்குதலில் 10க்கும் மேற்பட்ட படையினர் கொலலப்பட 6 இராணுவத்தினரின் சடலங்களைப் புலிகள் கைப்பற்றினர். மூன்று முறிப்புப் பகுதியிலும் நகர்வு முயற்சி முறியடிக்கப்பட்டது.




இவ்வாறாக, புலிகளின் தாக்குதல்கள் நெற்றியடியாக ஜெயசிக்குறுப் படைகளை நிலைகுலையவைக்க, ஏற்கனவே கலக்கமடைந்திருந்த சிங்கள அரசியல்த்தலைமை பதற்றமடைந்து, கடும் செய்தித் தணிக்கையினை அமுலுக்குக் கொண்டு வந்து இழப்புகளை மறைக்க முயன்றது. ஆனால் புலிகளிடம் இதற்கும் மருந்து இருந்தது. தாயகத்திலிருந்து புயல் வேகத்தில் அனுப்பி வைக்கப்படும் செய்திகள், சர்வதேச பணியகங்கள் மூலம் உலகச் செய்தி நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. உலகம் அறிந்த இந்த உண்மைகளை நீண்டகாலம் சிங்கள மக்களிடமிருந்து சந்திரிகா – ரத்வத்த குழுவினர் மறைப்பது கடினமான காரியமே.

ஆனி 5ம் திகதியிலிருந்து 6ம், 7ம், 8ம் திகதிகளில் சிங்களப்படைகள் புலிகளின் நிலைகளை உடைத்து முன்னேற பல முனைகளிலும் பெரிதும் முயற்சித்தன. 7ம் திகதி அம்பாகமம் பகுதி நோக்கியும் மாங்குளம் பகுதி நோக்கியும் முன்னேற முயற்சி செய்யப்பட்டது. இதன்போது 30 படையினர் கொல்லப்பட, பல நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். இராணுவத்தினரின் 11 உடல்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. பின்னர் மீண்டும் கிளிநொச்சி நகர் நோக்கி 8ம் திகதியன்று முன்

**மக்களின் ஆதரவுடன் சிங்களப் படைகளைப் புலிகளின் படையணிகள், தமிழ் மண்ணில் முறியடிக்கும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது**

னேற முயன்ற படைகளில் 75 பேர் கொல்லப்பட, 200க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். 30 இராணுவச் சிப்பாய்களின் உடல்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

ஜெயசிக்குறுவில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. இம்முறை படைகளின் இழப்புக்கள் புதிய சில பரிமாணங்களைப் பெற்றுள்ளன. அதாவது, முன்னேற முயன்ற எதிரியின் அனுபவம் வாய்ந்த அணிகளே கடும் இழப்புக்களைச் சந்தித்துள்ளன. அத்துடன் பீரங்கித் தாக்குதலில் காயமடைவோரின் எண்ணிக்கை வழமை போல் மிக அதிகளவில் உள்ளது. மேலும் இராணுவத்தினரின் சடலங்களைக் கண்டெடுத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கும் நிலைமைகள் இம்முறை அதிகரித்துள்ளன. இது இழப்புக்களை மறைக்க முடியாத ஒரு நிலையைத் தோற்றுவித்திருக்கிறது. இழப்புக்கள் பற்றிய ரத்வத்தவின் கணக்குகள் பின்வருமாறு அமைகின்றன. 208 படையினர் பலி, 1524 பேர் காயம், 63 பேரைக் காணவில்லை. ஆனால் ரணில் விக்கிரமசிங்காவோ பின்வருமாறு கூறுகின்றார். "400 படையினர் பலி. 2000 பேர் காயமடைந்துள்ளனர். ஒரு இராணுவ முகாமில் 30 படையினரின் உடல்கள் புதைக்கப்பட்டபின் அவர்கள் நடவடிக்கை யில் காணாமல் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்."

**- தீபன் -**

எது எப்படி இருப்பினும், களச் செய்திகள் மூச்சுச் திணறும் ஜெயசிக்குறுப் படைகளுக்கு மண்டையில் பலத்த அடி விழுந்துள்ள நிலைமையே எடுத்துக் கூறுகின்றன. இதனால் படைகளின் மனோநிலை மேலும் பாதிக்கப்பட்டுள்ளதுடன்,

தொடர்ச்சி 4ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பூனை கண்ணை மூடிக்கொண்டு பாலைக் குடிக்கப் பார்க்குமாம்!

## * கொழும்புச் செய்திநிறுவனங்களுக்கு- உணவுத்தடை

சுப்பு

மே மாதம் 28ம் திகதி, மூன்று முறிப்புக் கூடாகவும் அம்பகாமத்திற்கூடாகவும் இருதிசைவழியே முன்னேறி, மாங்குளத்தைக் கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட முயற்சி, மூக்குடைபட்டு, முகங்குப்புற நிலத்தில் வீழ்ந்தது. இந்த ஆக்கிரமிப்பு முயற்சி நாற்பத்தியெட்டு மணிநேரத்தில் விடுதலைப் புலிகளால் முற்றாக முறியடிக்கப்பட்டது. ஐம்பதுக்கு மேற்பட்ட இராணுவத்தினரைப் பலிகொடுத்து நூற்றுக்கணக்கானோரை காயங்களுக்குள்ளாக்கி, மேலும் நவீன ஆயுதங்களையும் வெடிபொருட்களையும் இராணுவ உபகரணங்களையும் விடுதலைப் புலிகளுக்கு மனவருத்தத்துடன் வழங்கி விட்டு, இந்தமுயற்சி தனது வாலை ஒட்டச் சுருக்கிக்கொண்டது.

வீழ்ந்தாலும் மீசையில் மண்ஒட்டவில்லை என்பது கணக்காய், ஜெயசிக்குறுவின் மறுமுனையில் சிங்களப்படை மோவாயைத் துடைத்தபடி எழுந்தது. இம்முறை அது கிளிநொச்சியில் தனது பலத்தைக்காட்ட விளைந்தது.

> செய்தித் தணிக்கை வெறுமனே சிங்கள மக்களுக்கானது. அதிலும், உலகத் தொடர்புச் சாதனங்களால் பயன்பெறமுடியாத, கிராமத்து சிங்கள மக்களுக்கானது. பொருளாதார பின்னபலம் இன்றி பிள்ளைகளை இராணுவத்தில் சேர அனுமதித்த ஏழைப் பெற்றோருக்கானது.

பெப்ரவரி முதலாம் திகதி அதாவது சிறீலங்கா தனது 50வது சுதந்திரதினப் பொன்விழாவைக் கொண்டாட ஆவலுடன் காத்திருந்தபொழுதில், சரியாக நான்கு நாட்களுக்கு முன்னர், பெரும் அதிர்ச்சிவைத்தியம் ஒன்றை மேற்கொண்டு, முன்னூறுக்கும் மேற்பட்ட சிங்கள ஆக்கிரமிப்புப்படையினரைக் கொன்று, பலநூற்றுக்கணக்கானவரை விடுதலைப் புலிகள் காயப்படுத்தியிருந்தனர். கிளிநொச்சியின் நகரப்பகுதிஉட்பட பல பகுதிகளை இதன்போது விடுதலைப் புலிகள் மீட்டிருந்தனர்.

விடுதலைப் புலிகளிடம் அன்று இழந்த பகுதிகளை மீளக்கைப்பற்றி, அங்கு குந்தியிருந்துகொண்டு, ஜெயசிக்குறுவின் மறுமுனைவரை முன்னேறிச் சென்று, தொங்கிநிற்கின்ற படையினருடன் கைகுலுக்கிக்கொள்வதென்பது புதிய திட்டம்.

விடுதலைப் புலிகளின் பலம் முழுதும் மறுமுனையில் திரண்டிருப்பதால், இம்முனை நகர்வு இலகுவானதாக இருக்கக்கூடும் என்பது சிங்களத்தின் நப்பாசை.

யூன் நாலாம் திகதி அதிகாலை, இருதிசைவழியே முன்னேறி முதலில் கிளிசொச்சியை முழுமையாகக் கைப்பற்றுவது என்ற முழக்கத்துடன் சிங்களப்படை முன்னேறியது. இந்தஆக்கிரமிப்பு முயற்சிக்கு, கிளிசொச்சியின் வடமுனையில் குவிந்திருந்த இராணுவமும், பரந்தன் ஆனையிறவு முகாம் இராணுவமும் போதாதென்ற காரணத்தால், மண்டைதீவு அல்லைப்பிட்டி மண்கும்பான் போன்ற தீவுப்பகுதிகளில் இருந்து, 514வது படைப்பிரிவைச்சேர்ந்த இராணுவத்தினர் மீளப்பெறப்பட்டு, இருபது முப்பது வாகனங்களில் ஆனையிறவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

வழமைபோல பெரும் எடுப்பிலான முன்னேற்றம். குண்டுவீச்சுவிமானங்களும், உலங்கு வானூர்திகளும் வழமையான தமது அழிவுவேலைகளைப் புரிந்தன. ஆட்டிலறிகள் மோட்டார்கள் கண்கடை தெரியாமல் செல்களை ஏவித்தள்ளின. பூமி அதிர்ந்து, சுடுகாடாய் பூதி தகித்துக்கொண்டிருக்க, இராஜ கம்பீரத்துடன் டாங்கிகள் முன்னேறின. அதில் கவர் எடுத்தபடி, இராணுவமும் ஆக்கிரமிக்க அணிவகுத்துச் சென்றது.

தாக்குதலுக்கு உரிய இடம்வரும்வரை பார்த்திருந்த விடுதலைப் புலிகள், தமது உக்கிரமான தாக்குதலை நடத்தினர். சிங்களப்படையினர்மீது மோட்டார் குண்டுகளைப் பொழிந்தனர். பலமுனைகளில் நேரடியாகப் பொருதினர். இதில் சிங்களம் எதிர்பார்த்திராத இழப்பைச் சந்தித்தது. நூறுக்கும் மேற்பட்ட சிங்களப் படையினர் இழந்தனர். பலநூற்றுக்கணக்கில் படையினர் காயப்பட்டனர். அவயவங்களை இழந்தனர். பெருமளவிலான ஆயுதங்களை இழந்தனர். விடுதலைப் புலிகளின் தீவிர தாக்குதலை உணர்ந்ததாலோ என்னவோ சிங்களம் தலைதெறிக்க ஓடித்தப்பித்தது. இறந்த இராணுவத்தினரையும், ஆயுதங்களையும் காவிக்கொண்டோட சிங்களத்திற்கு காலம் இடமளிக்கவில்லை. இதில் 51 இராணுவ உடல்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றிக்கொண்டனர்.

இந்தத் தோல்வியை தணிக்க, மறுமுனைகளில் மீண்டும் சண்டையைத் தொடங்கி மீண்டும் மீண்டும் சிங்களம் தோற்றுக்கொண்டிருக்கின்றது.

கிளிநொச்சித் தோல்வி, சிங்கள அரசிற்கு ஒரு கட்டாயமாக ஒன்றைச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தியதுபோலும்.

அரசினது இராணுவமுயற்சிகள் ஒவ்வொன்றும் படுபயங்கரமாக தோல்வியடையும்போது, அது கலக்கத்திற்கும் என்னசெய்வது என்றறியாத குழப்பத்திற்கும் உள்ளாவது தவிர்க்கமுடியாதது. அதனது அறிவுக்குறைச்சலான நடவடிக்கைகளுக்கும் தொடர்தோல்விகள் வழிவகுத்துவிடுகின்றன.

கிளிநொச்சியில் பெற்ற பெரும் தோல்வி, சிங்கள அரசு செய்தித்தணிக்கையை அறிவிக்க தூண்டுகோலாய் அமைந்துவிட்டது. மக்களுக்கும் உலகத்திற்கும் எதைச்சொல்வது. தோல்வியின் கனபரிமாணம் பெரும் எதிர்ப்பாய் ஆட்சியைநோக்கித் திரும்பிவிடுமே என்ற ஆதங்கத்தில், அவசரஅவசரமாக மறுநாளே செய்தித்தணிக்கையை சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா அவசரகாலச்சட்டவிதிகளுக்கமைய அறிவித்தார். கடந்த காலங்களில் செய்தித்தணிக்கையை கண்காணிக்கும் தலைமை அதிகாரியாக சிவில் நிர்வாக அதிகாரிகளே நியமிக்கப்பட்டுவந்த நிலையில், இம்முறை சந்திரிகா அம்மையார். இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் நமுனியை, செய்தித்தணிக்கைக்குழுவின் தலைமை அதிகாரியாக நியமித்தார்.

இத்தச் செய்தித்தடைக்கு, இருவேறு காரணங்கள் இருப்பதாகவே அறியப் படுகின்றது. ஒன்று தோல்வியை மறைப்பது. மற்றையது இந்தக் தோல்விகளுக்கு தமிழ்மக்கள்மீது பழிதீர்க்க படையினருக்கு வழியேற்படுத்திவிடுவது. இனப்படுகொலைகளை இஸ்ட்டத்திற்கு மேற்கொள்ளவும், அதை உலகம் அறியாதவகையில் மூடிமறைக்கவும் இந்தச் செய்தித்தணிக்கையை பயன்படுத்த சிங்கள அரசு எண்ணியது.

அதேபோல, அடுத்த ஓரிருதினங்களில், முல்லைமாவட்டத்தில் சுதந்திரபுரத்தில் இடம்பெயர்ந்தோர் குடியிருப்புத் திட்டத்தில் சிங்கள இனவெறிப்படை வெறித்தனமான தாக்குதலை நடத்தியது. இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பொதுமக்களை கொன்று குவித்தது. நூறுக்கும் மேற்பட்ட மக்களின் குடிமனைகளை எரித்துச் சிதைத்தது. ஐம்பதுக்கும் மேற்பட்டோரை படுகாயப்படுத்தியது.

அதாவது வருடம்தோறும் தமிழ்மக்களால் கனத்த நெஞ்சங்களுடன் நினைவு கூரப்படவேண்டிய மற்றுமொரு யூன் படுகொலையை சிங்கள இனவெறிப்படை நடத்திமுடித்திருக்கின்றது. தமிழ்மக்களின் மனங்களில் இந்த ஆறாதவடுவை ஏற்படுத்திவிட்ட சிங்கள இனவெறி அரசு, வருடாவருடம் இதற்கு பதிலளிக்க வேண்டிய தேவையை தானாகவே ஏற்படுத்தியுள்ளதாகவே கொள்ளவேண்டும்.

இந்தச் செய்தித்தணிக்கை, சிங்கள அரசின் குருட்டுத்தனமான சிந்தனையால் உருவானது. இதனால், விஞ்ஞானத் தொழில்நுட்பத்தில் விஞ்சிநிற்கும் உலகத் தொடர்புச் சாதனங்களை கட்டிப்போடமுடியுமா? விடுதலைப் புலிகளின் தகவல் பரிவர்த்தனையை கட்டுப்படுத்தமுடியுமா? உலகத் தமிழ்மக்கள் உடனுக்குடன் செய்திகளை அறியும் நிலையை பாதிக்கமுடியுமா? கண்ணை மூடிக்கொண்டால் உலகம் இருட்டா?

> வீழ்ந்தாலும் மீசையில் மண்ஒட்டவில்லை என்பது கணக்காய், ஜெயசிக்குறுவின் மறுமுனையில் சிங்களப்படை மோவாயைத் துடைத்தபடி எழுந்தது. இம்முறை அது கிளிநொச்சியில் தனது பலத்தைக்காட்ட விளைந்தது.

சிங்கள விமானம் தமிழ்மக்கள்மீது குண்டைவீசிவிட்டு தனது தளம் திரும்புமுன்னர், அதன் அதிர்வை வெளிஉலகம் உணரும் வண்ணம் தொடர்புச் சாதனங்களின் விஞ்ஞானத் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்திருக்கின்றது. உலகெலாம் பரவியிருக்கும் தமிழர்களின் தொடர்புச் சாதனங்களும் அதற்கான சக்தியை கொண்டிருக்கின்றன.

ஆக, செய்தித் தணிக்கை வெறுமனே சிங்கள மக்களுக்கானது. அதிலும், உலகத் தொடர்புச் சாதனங்களால் பயன்பெறமுடியாத, கிராமத்து சிங்கள மக்களுக்கானது. பொருளாதார பின்னபலம் இன்றி பிள்ளைகளை இராணுவத்தில் சேர அனுமதித்த ஏழைப் பெற்றோருக்கானது.

உண்மையை மறைத்து, தமது வெற்றியில் இலக்கை அடைய எவ்வளவு விலையும் கொடுக்க தயாராக இருக்கும் சிங்களத்தின் தேவையை, இந்த மட்டத்தில் பூர்த்திசெய்ய ஒருவேளை இந்தச் செய்தித்தணிக்கை உதவிசெய்யக்கூடும். ஆனால் மற்றைய நோக்கங்கள் யாவும் இதனால் தோல்வியையே தழுவியுள்ளன.

இங்கு இன்னொரு பிரச்சினையும் இதனால் உருவெடுத்துள்ளது. அதாவது வதந்தி. வாய்வழித்தகவல்கள், காற்றுநிரப்பிய பலூனாய் ஊதிப்பெருத்து அரசாங்கத்தை மூச்சுத்திணற வைத்துள்ளது.

இராணுவ இழப்புக்குறித்து வாய்க்கு வந்த தகவலாய் சிங்களம் ஆடிப் போய்கிடக்கிறது.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்க, கடந்த வாரம் அமைச்சர் ரத்வத்தை இராணுவ இழப்பை வெளியிட்டார். 10 நாட்களில் 208 இராணுவம் இறந்து, 1500படையினர் காயமடைந்தனர் என்றார். 63பேர் காணாமல் போயுள்ளனர் எனவும் கூறினார்.

ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவோ இதனை மறுக்கின்றார். 400க்கு மேற்பட்ட படையினர் இறந்து, 2000க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என்றார். 30இராணுவ உடல்களைப் புதைத்துவிட்டு, அவர்களைக் காணாமல்போனோர் பட்டியலில் சேர்த்த வழமையான வித்தையையும் அவர் புட்டுபுட்டு வைத்தார்.

தற்போது சிங்கள மக்களுக்குக் பெரும் குழப்பம். ரத்வத்தை சொல்வது சரியா? ரணில் விக்கிரமசிங்கா சொல்வது சரியா?

இருபிரதான கட்சிகள் அரசியல் விவாதப்பொருளாக இராணுவ இழப்பை வைத்து இழுபறிப்படுகின்றதை சிங்கள மக்கள் வேதனையுடன் குழப்பத்துடனும் நோக்குகின்ற நிலையைத்தவிர, இச் செய்தித்தணிக்கை வேறு எதனையும் செய்திருப்பதாக இதுவரை அறிய முடியவில்லை.

இன்னொன்றையும் அது செய்திருக்கின்றது என்பதை மறைப்பதற்கில்லை. அதாவது, இந்த இராணுவ நடவடிக்கையை வைத்து பிழைப்பு நடத்திய கொழும்புப் பத்திரிகைகளை அது வெகுவாகப் பாதித்துள்ளது. எமது படையினருக்காகவே பக்கம் சார்ந்து எழுதினோம். அரசின் நலன்கருதியே செய்திகளை உருவாக்கினோம். ஆனால்... எமக்கேன் இந்த வஞ்சனை என்று புலம்பி அரசியல் தலையங்கம் எழுதும் சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு ஆதரவு கூறுவார் யாரும் இல்லை. இது அவற்றிற்கு உணவுபொருளாதாரத்தடைபோலும். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கைத் தீவில் அமெரிக்கத் தலையீடு :

அமெரிக்க அரசின் உயர்நிலை அரசியல் அதிகாரிகளும் பென்டகனின் இராணுவ அவதானிகளும் – அதனது சிறப்புப் படைப் பிரிவுகளின் பயிற்சி நிபுணர்களும் அடிக்கடி கொழும்பிற்கும் கல்முனைகளுக்குமென பயணம் செய்கின்றனர்.

அமெரிக்க இராணுவத்தின் சிறப்புப் படைப் பிரிவான கிறின் புரோட்டின் பயிற்சியாளர்கள் சிங்களத் தரைத்துருப்புகளுக்கு சமர்ப்

# கழுகு

பயிற்சி அளித்துவருவது பழைய சங்கதி. இப்போது அமெரிக்க கடற்படையின் தாக்குதல் அணியான 'சீல்' கொமாண்டோப் பிரிவின் பயிற்சியாளர்கள் சிங்களக் கடற்படையினரின் கடற்சண்டைத் தரத்தை உயர்த்தவென கொழும்பு வந்துள்ளனர்.

இதேசமயம் வடக்கு கிழக்கு போர் முனைகளுக்கு நேரடி விஜயம் செய்யும் அமெரிக்க அதிகாரிகள் சிங்களப் படைமுகாம்களில் தங்கி நின்று சிங்களப் படைத் தளபதிகளுடன் சந்திப்புகளையும் – கலந்தாலோசனைகளையும் நடத்தி வருகின்றனர்.

இதேசமயம் உய்தொழில்நுட்ப இராணுவ உபகரணங்களை அமெரிக்க அதிகாரிகள் சிங்களப் படைக்கு வழங்கிவருகின்றனர். **சிங்களத் துருப்புகளுக்கு சிம்ம சொப்பனமாக மாறிவிட்ட புலிகளின் மோட்டார்–ஆட்டிலெறிகளை அழிப்பதற்காக அவற்றின் ஏவுதளங்களை இனங்கான முயலும் வேவுசாதனங்களையும் அதற்கான பயிற்சியாளர்களையும் இலங்கைக்கு அனுப்பி வைக்கின்றது.**

மொத்தத்தில் சிறீலங்கா அரசின் படைபலத்தை பலப்படுத்திவிடுவதிலும் இலங்கையின் இனப்போரில் தனது இராணுவத் தலைமீட்டை அதிகரிப்பதிலும் அமெரிக்க அரசு தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

பயிற்சிகள் – சாதனங்கள் என்று படையியல் ரீதியான உதவிகளை வழங்கி, சிங்கள அரசுக்கு இராணுவ ஆதரவை நல்கும் அமெரிக்க அரசானது அரசியல் – இராஜதந்திர மார்க்கங்களிலும் இலங்கைத் தீவை தனது செல்வாக்கு மண்டலத்திற்குள் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்கிறது.

இலங்கைத்தீவு அமைந்துள்ள தென்னாசியப் பிராந்தியத்தில் தனது 'தேசிய' நலன்களைப் பேணவென அமெரிக்க அரசு நியமித்த முக்கிய அதிகாரிகள் அடிக்கடி கொழும்பு சென்று சிங்கள ஆட்சியாளர்களுடன் இரகசியப் பேச்சுக்களை நடாத்திச் செல்வது கடந்த சில வருடங்களில் அதிகரித்துச் செல்கிறது.

மிக அண்மையில், அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் தென்னாசிய விவகாரங்களுக்கான துணை அமைச்சர் கார்ல் இன்டபுத் (Karl Inderfuth) அமெரிக்க தேசிய பாதுகாப்புச் சபையின் தென்னாசிய விவகாரங்களுக்கான மூத்த பணிப்பாளர் புரூஸ்ரைவில் ஆகியோருடன் ஐ. நா. சபைக்கான அமெரிக்கத் தூதர் பில் ரிட்சட்சனுடனும் கொழும்பு சென்று சந்திரிக்காவையும் அவரது பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசியது குறிப்பிடத்தக்கது.

பல்வகை அரசியல் ஆதரவை சந்திரிகா அரசுக்கு நல்கி வந்த அமெரிக்க நிர்வாகம், தான் தயாரித்த பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் புலிகள் இயக்கத்தையும் இணைத்து – அதன் மூலம் சிங்கள அரசின் போர் முயற்சிக்கு அரசியல், தார்மீக ஆதரவை கொடுத்து – சிங்கள அரசையும் தன்வசப்படுத்தியுள்ளது.

இதேவேளை, பொருண்மிய உதவிகள் மற்றும் முதலீடுகள் என்ற ரீதியில் இலங்கைத்தீவின் பொருளாதாரத்திலும் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. கனிவளங்களைக் கிண்டி எடுக்கவென்றும், வானொலி தொலைத் தொடர்பு நிலையத்திற்கென்றும் பெருமளவு நிலப்பரப்பை தனது கட்டுப்பாட்டிற்குள் எடுக்க அமெரிக்கா முயல்வது அனைவரும் அறிந்த செய்தி. போர்ச்சுமைச் செலவால் அல்லலுறும் சிங்கள அரசுக்கு பொருளாதார உதவிகள் புரிந்து கைதூக்கி விடுவதன் மூலம் போரையும் தூண்டிக் கொண்டு இலங்கைத் தீவின் பொருண்மியத்தையும் தன்மீது தாங்கி நிற்கும் நிலைக்கு அமெரிக்கா இட்டுச் செல்கின்றது.

இதேவேளை, சிலாபப் பகுதியில் வானொலி அறிவியல் நிலையத்தை அமைத்து விடுவதிலும் அமெரிக்கா அக்கறை காட்டுகின்றது. ஒலிபரப்பு நிலையம் என்ற கோதாவில் ஒரு தொலைத் தொடர்பு தளத்தை இலங்கைத்தீவில் உருவாக்க அமெரிக்கா முயல்கிறது என்று சிலர் ஐயப்படுகின்றனர். இது அப்பிராந்தியத்துக்கான அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினரின் செயற்பாட்டு மையமாக செயற்பட வாய்ப்புண்டு என்றும் அவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இவ்விதம், இராணுவ – அரசியல் பொருளாதார புலனாய்வு ரீதியல் இலங்கைத்தீவின் மீது தலையீடுகள் செய்து தீவை தனது செல்வாக்கு மண்டலத்திற்குள்

# தரை

கொண்டுவர அமெரிக்கா பகீரதப் பிரயத்தனம் செய்கின்றது. சந்திரிகா அரசு பதவியேற்ற பின்னர் இந்தப் படையெடுப்பு தீவிரம் பெறத்தொடங்கியது.

புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாக பிரகடனப்படுத்திவிட்டு, அதை ஒரு சாட்டாக வைத்து பயங்கரவாதத்தை ஒழிக்க சிறீலங்கா அரசுக்கு உதவுதல் என்ற போர்வையில் இலங்கைத் தீவில் தனது தலைமீட்டை அமெரிக்கா வேகப் படுத்தியுள்ளது. இலங்கைத்தீவை தனது செல்வாக்கு மண்டலத்திற்குள் கொண்டுவர அமெரிக்கா எடுக்கும் முயற்சிகளுக்கு இந்தப் பிராந்தியத்தில் அது கொண்டுள்ள வல்லரசு நலன்கள்தான் மிக முக்கிய காரணிகளாகும்.

இந்தியா–இலங்கை–பாகிஸ்தான்–பங்களா தேஸ்–பூட்டான்–நேபாளம்–மாலைதீவுகள் ஆகிய நாடுகளைக் கொண்ட தென்னாசிய மண்டலத்தில் தனது வல்லாதிக்க செல்வாக்கை நிலைநிறுத்தக்கூடிய சாதக அம்சங்களைக் கொண்ட வாய்ப்பான அரசாக அது சிங்களத்தைக் கருதுகின்றது.


அத்துடன் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் கடல்வழி இராணுவக் கேந்திரமாக இலங்கைத்தீவு இருந்துவருகின்றது. இலங்கையின் இனப்போரில் சிங்களப் படைக்கு உதவுவதற்கென தனது கடல் கொமாண்டோ அணியான சீல் பிரிவினரை அமெரிக்க அரசு அனுப்பினாலும் அந்த உதவிப் பணிக்கும் அப்பால் இந்திய இலங்கைக் கடற்பரப்பில் சீல் கொமாண்டோக்கள் எதிர்காலத் தேவை கருதி சில இராணுவ ஆய்வுகளையும் இரகசியமாக மேற்கொள்வர் என்பது திண்ணம்.

இதேவேளை, இந்தப் பிராந்தியத்தின் மிகப்பெரிய நாடான இந்தியாவுடன் இலங்கை கொண்டிருக்கும் அவநம்பிக்கை அமெரிக்காவின் தெரிவிற்கு வலுச் சேர்த்துள்ளது.

சிறீலங்கா அரசானது அடிப்படையில் இந்திய எதிர்ப்புக் குணாம்சத்தை கொண்டிருக்கின்றது. காலத்திற்குக் காலம் தனது இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை பகிரங்கமாக வெளிப்படுத்தி வருகின்றது. இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு போராபத்தை விளைவிக்க முயன்ற இந்திய–சீன - ஆதரவு நிலைப்பாட்டையே சிங்கள அரசு கடைப்பிடித்தது. இந்தியாவின் ஆதரவுடன் நடந்த பங்களாதேஷ் விடுதலைப் போராட்டத்தின்போது அந்த விடுதலைப் போரை அடக்க முயன்ற பாகிஸ்தானிய போர் விமானங்கள் தனது நிலப்பரப்புக்கு மேலாக பறக்க இந்தியா தடைவிதித்தது. (பாகிஸ்தானையும் பங்களாதேசையும் இந்திய நிலப்பரப்பு பிரிக்கின்றது). இந்த நிலையில், பாகிஸ்தான் போர் விமானங்களை இலங்கைத் தீவின் மேலாகப் பறந்து இந்தியாவைச் சுற்றி பங்களாதேசுக்குச் செல்ல சிங்கள அரசு அனுமதித்து இந்தியாவுக்கு எதிராகச் செயற்பட்டிருந்தது.

இலங்கைத் தீவின்மீது அண்மைக்காலமாக விரிவடைந்துவரும் அமெரிக்க ஆதிக்கத்தை இந்தியா கண்டும் காணாமலும் இருந்துவருகின்றது. இதற்கு இந்தியாவின் உள்நாட்டு அரசியல் நெருக்கடியே பிரதான காரணியாகும். நிலையான ஆட்சியின்மையால் இந்திய அரசு கடந்த சில வருடங்களாக நிலை தடுமாறியபடி உள்ளது. உள்நாட்டு அரசியல் முடிச்சுக்களை அவிழ்ப்பதற்காக இந்திய ஆட்சிப்பீடத்தினர் அதிகளவு நேரத்தினை செலவிட்டுவருவதால் அதனது கொல்லைப் புறத்தில் புற்றுநோய்போல் பரவிவரும் அமெரிக்கத் தலைமீட்டை அது கண்டும் காணாமலும் இருந்துவருகின்றது:

**தென்னாசியப் பிராந்தியத்திலுள்ள தனது வல்லாதிக்க நலன்களை உறுதியாகப் பாதுகாக்க வேண்டுமாயின் சிங்கள அரசின் ஒற்றையாட்சி இரும்புப் பிடிக்குள் இலங்கைத்தீவு முழுக்க இருக்க வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகின்றது.**



**அதனால்தான் தமிழரின் விடுதலைப் போரை இராணுவ ரீதியாக ஒடுக்கி இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்பை பாதுகாக்கத் தேவையான சகலவிதமான உதவிகளையும் சிங்கள அரசுக்கு நல்கிவருகின்றது.** அமெரிக்காவின் இந்த நிலைப்பாட்டால் சிங்கள அரசும் உற்சாகம் பெற்று தமிழினத்துடனான போரைத் தீவிரப் படுத்துகின்றது. ★

# இறங்குகின்றது

www.tamilarangam.net



# அண்ணன் மடி பிறந்த அக்கினிக் குஞ்சாகி, அனல் விழுங்கி,

மீண்டும் ஒரு முறை உப்பளக் காற்று ஊதத் தொடங்கியது. கரியபுலிகளின் கனவைச் சொல்லிச் சொல்லி அசைந்து சுளையாய், கனத்த காற்றாய் வீசத் தொடங்கியது. விடியாத இரவுகளும் முடியாத துயரங் களும் சுமந்து எம் மண்ணின் வாழ்வுக் காக கனவு சுமந்தவரே! நெஞ்சில் நெருப்பெரிந்த நீண்ட பயணங்களில் எல்லாம் எம் மக்களுக்காய் பாரம் சுமந்தீர். உம்மையே உருக்கி உருக்கி இந்த மண்ணிற்கு உரம் வளர்த்தீர். எங்கள் தலைவனின் வழியாய் ஓராயிரம் நெஞ்சங் களோடு வெடித்துச் சிதறிய அந்தக் கணங்களில் எங்கள் உணர் வின் மொழி சொல்ல முடியாத மனிதர்களாயினீர்.

1998.02.01 அதிகாலை பரந்தன் கிளிநொச்சி இராணுவத் தளங்கள் மீதான பாரிய தாக்குதல், இராணுவத் தளங்களின் முக்கிய இலக்குகள் மீதான தாக்கு தலின்போது எட்டுப் பெண் கரும்புலிகள் உட்பட 13 புலிகள் வீரகாவியமாயினர். தங்கள் நினைவெல்லாம் எம் தலைவனின் இலட்சிய நெருப்பைச் சுமந்து, இலக்கு நோக்கிய பயணத்திற் காய் அவர்கள் உழைத்தவை ஏராளம். நடந்த தூரங்கள் நீண்டவை. அவர் களின் கதை பெருவரலாறாய் எம் மண்மீது வாழும் அந்த வரலாற்றுப் பக்கங்கள் விரிந்தவை. சாதாரண மனித உணர்வின் மொழி இலக்கணங்கள் கொண்டு எழுதப்பட முடியாதவை. அந்த வரலாற்றுப் பக்கங்களில் இருந்து சில நினைவுப் பதிவுகளைச் சுமந்தபடி தருகிறோம்.

◆ ◆ ◆

இந்துவுக்கு மெதுவாகக் கதை க்கவே தெரியாது. தான் நிற்கும் இடத்திற்கு ஊரையே கூட்டுவாள். மணிக்கணக்காக மிகுந்த கவலைச் சுமந்தபடி இருப்பவர்களும் கோபத்தால் முகத்தைத் தூக்கி 'உம்' என்று வைத்திருப்பவர்களும் இந்துவுக்கு கிட்டப்போய், அவள் பகிடிகளைக் கேட் டால் கட்டாயம் சிரிப்பார்கள். இல்லா விடில் அப்படி இருப்பவர்களிடம் தானே போய் அவர்களைச் சிரிக்க வைத்து விடுவாள். அந்தச் சிரிப்புகளும் பகிடி களும் தனது ஆழ்ந்த கவலைகளை மறைக்கத்தானோ என்று நினைக்கத் தோன்றும். நாம் அப்படி நினைப்போமே தவிர, இந்து தனது முகத்தில் துளியாக வும் காட்டிக் கொள்ளமாட்டாள்.

அவள் பிறந்து வளர்ந்தது எல்லாமே மட்டக்களப்பில்தான். மட்டக்களப்பு, அம்பாறையின் நிலமை எல்லோருக்குமே தெரிந்ததுதான். தமிழராகப் பிறந்தவர்கள் எல்லோருமே படுகின்ற அவலங்கள் சொல்லமுடியாதவை. அவை நெஞ்சை உருக்கும் கண்ணீர்க் கதைகள். அவளது வீட்டாருக்கும் அந்த அவலம் நிகழ்ந்தது. அவள்மேல் பிரியம் எல்லாம் பொழிந்து நேசம் வைத்த அவளது இரண்டு அண்ணன்மாரையும் அவ ளுக்கு முன்னாலேயே சிங்கள இராணுவம் சுட்டுக் கொன்றது. அந்த அவலம் அவளது பிஞ்சு மனதில் நீங்காத காயமாக வலித்துக் கொண்டேயிருந்தது. அந்தத் துயரம் அவள் வளர வளர அவளோடு நீங்காமல் வளர்ந்து ஒருநாள் அவளை புலிகளின் பாசறைக்கே செல்ல வைத்தது. இதுதான் அவள் இயக்கத்திற்கு வந்த கதை.

"நான் கரும்புலியாகப் போகவேணும் என்ர அண்ணாக்களை சுட்டவனுகளை நான் வெடிகுண்டு கொண்டுபோய் அழிக்கவேணும்".

அவள் அடிக்கடி கூறுகின்ற அந்தச் சொல்லில் இழையோடிய சோகத்தையும் மீறித் தெரிகின்ற ஆவேச நெருப்பை எங்களால் நன்கு புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

வீட்டில் கைக்கொண்ட பழக்கம் அவள் மாமிசமே சாப்பிடுவதில்லை. ஆனால் கரும்புலிக்கேயுரிய மிக்க கடுமையான பயிற்சிகள், வேலைகள் அவளை மாமிசம் சாப்பிட வைத்தன.

"நான் நல்லா றெயினிங் எடுக்க வேணுமெண்டால் இதைச் சாப்பிட வேணும்தான்."

அதற்காகவே மெல்ல மெல்ல மாமிசம் சாப்பிடப் பழகி, நீண்ட, கடின பயிற்சிகளையும் செய்துமுடித்தாள்.

இந்துவோடு பழகிய நாட்கள் இனியவை. ஒரு தென்றலின் இனிமை யோடு உலா வந்த அவளது நாட்கள் நெஞ்சை விட்டு அகலாதவை. காட் டாறு வெள்ளமாக ஓடும் அவளது நினைவுக்குள் அவை ஒரு சிறுதுளி. பல்கிப் பெருகி வியாபகமாயஎங்களுக்குள் அவள் நிறைந்து போனாள்.

**கப்டன் இந்து**

**புனிதா கந்தையா**

*அம்பாறை*

*பிறப்பு:–1978–12–24*

❑ ❑ ❑

உமையாள் கட்டையான உருவம். அவள் வைத்திருக்கும் ஆயுதம் ஆளைத் தூக்கும். அவளது உருவத்திற்கும் அவள் கையில் வைத்திருக்கும் ஆயுதத் திற்கும் பொருத்தமே இல்லை.

சின்னஞ் சிறிய உருவமாய் இலாவ கமாய் வளைந்து கொடுக்கும் உடல். அனைத்துப் பயிற்சிகளிலும் அவள் திறமைசாலி. சிறுத்தைப் படையணியில் இருந்து அவள் எடுக்காத பயிற்சிகள் இல்லை. உடலை வாட்டி எடுக்கும் பயிற்சிகள் கூட அவளுக்கு இனிப்பான வை. நீச்சல் பயிற்சி என்றாலும் சரி வேறு என்னென்ன பயிற்சிகள் என்றாலும் சரி அவளிடம் உற்சாகம் கரைபுரண்டு ஓடும்.

ஒவ்வொரு முறையும் இலக்குக்கான பயிற்சிகள் எடுத்து, அந்த இலக்குகள் கிடைக்காமல் போக, வேறொரு இலக்குக்காய் பயிற்சி எடுத்து, நெய்யாய் உருகிய அந்த கடின உழைப்புக் களிலும் அவள் சோர்ந்ததில்லை. மனம் சலித்ததை நாங்கள் காணவில்லை.

இறுதியாக பரந்தன் – கிளிநொச்சித் தாக்குதலுக்காக நீண்ட விழித்த இரவு களாய் ஓயாத பயிற்சிக் காலங்களாய் கழித்த இந்த இறுதி நாட்களிலும் சிரித்தபடியேதான் பயிற்சிகளை எல்லாம் எடுத்தாள். போகும்போது பூத்துக் குலுங்குகின்ற நீண்ட சிரிப்போடுதான் போய் முடிந்தாள்.

**கப்டன் உமையாள்**

**புஸ்பராணி செல்லத்துரை**

*முல்லை மாவட்டம்*

*பிறப்பு:– 1978–07–22*

❑ ❑ ❑

கப்டன் நளாயினி அவள் ஒரு பொறுப்புணர்ச்சி மிக்க போராளி. தானும் தன் கடமையும் என்று திரிந்து, போய் வெடித்த அவளது நாட்கள் அர்த்தமுள்ளவை. இயக்கத்தின் வெளி நிர்வாக வேலைகளில் நீண்ட நாட்கள் உழைத்தாள். சண்டைக்குப் போக வேண்டும் என்று துடியாய் துடித்த காலங்களில் எல்லாம் ஏதோ ஒரு துறையில் அவள் வேலை செய்ய வேண்டிய கட்டாயமும் கடமையும் வந்து வாய்த்தன. அந்த நேரங்களில் எல்லாம் அவளிடம் கரும்புலிக் கனவு விரிந்து பரந்திருந்தது. இடையிடையே தனது ஆசைக்கு ஏற்றபடி வந்து வாய்த்த சண்டைக் களங்களில் எல்லாம் நன்றாகவே சண்டை செய்தாள்.

தனது மனதின் உள்ளே நீண்ட நாட்களாக வரித்திருந்த கரும்புலிக் கனவை நிறைவேற்றவென தலைவரு க்கு கடிதங்கள் அனுப்பினாள். ஒருநாள் பதிலும் கிடைத்தது. அதற்கான பயிற்சிக் காலங்களை எதிர்பார்த்த வண்ணமே இருந்தாள்.

கடுமையாக ஓய்வு இன்றி நடக் கின்ற பயிந்சிகளை எல்லாம் தவற விடாது எடுப்பாள். ஆரம்பத்தில், நீந்தத் தெரியாதது அவளுக்கு பெரிய குறை. சிறிது சிறிதாக நீந்தப் பழகினாள். அவளது அந்த முயற்சியை தோழிகள் நினைவு கூர்ந்தனர்.

ஒருமுறை நீந்தவென கடலில் இறங்கியவளைக் காணவில்லை. தேடிப் போய் கடலில் இறங்கிப் பார்த்தபோது அவள் தலை மட்டும் புள்ளியாகத் தெரிய, அலை அள்ளிப் போய்க் கொண்டிருந்தது. உடனடியாக படகு கொண்டு போய் அவளை ஏற்றிக் கொண்டு வந்து கரையில் போட்டு விட்டு எல்லோரும் செய்த கிண்டலில் ஆள் 'சீரியஸ்' ஆகி,

"நான் மூண்டு மைல் (கடல் மைல்) நீந்திப் போட்டுத்தான் கரைக்கு வருவன்"

என்று ஒரே நீச்சலாய் நின்று நீச்சல் பழகியபோது அவளது விடா முயற் சியும் உறுதியும் எங்கள் நெஞ்சங் களைத் தொட்டது. விழுப்புண் பட்டு இயலாத காலுடனும் செய்கின்ற எந்தப் பயிற்சியிலும் தன் இயலாமையைக் காட்டி பின் நிற்காத உறுதியான போராளி.

பழகுவதற்கு எளிமையானவள். அன்பு நிறைந்த அவளைப் பற்றி சொல்லிக் கலங்கினர் தோழிகள். இனி அவள் வரமாட்டாள் என்பது மட்டும் நிச்சயம்.

**கப்டன் நளாயினி**


**கோகிலா பழனி**

*முல்லைத்தீவு மாவட்டம்*

*பிறப்பு:– 1978–10–22*

❑ ❑ ❑

"வானம் விடியும் நேரம் வரையும்
சேவற்கோழி கூவும் – எங்கள்
வாசல் விடியும் நேரம் வரையும்
தேசப் புயல்கள் வீசும்"



www.tamilarangam.net



# நீந்த முடியாத நெருப்பாற்றை நெஞ்சினால் தாவி நடந்து...

செங்கதிரை முந்திக் கொண்டு அவளது கோபம் நறுக்குத் தெறித்தாற்போல சொற்களாக வரும். சிறிது நேரத்தில் தானே போய் கோபம் கொண்டதற்காக வருந்தி மன்னிப்புக் கேட்பாள். அந்தப் பண்பு எல்லாரையும் கவரும்.

அவளது அம்மாவுக்கு ஆசையாக அவள் ஓரேயொரு பெண் பிள்ளை. ஆரம்பப் பயிற்சியின் போது இவளைத் தேடி அம்மா பாசறைக்கே வந்து விட்டார். இவளைப் பார்க்க வந்தவர் இவளை விட்டு போக மாட்டேன் என்று விடாப்பிடியாய் நின்றுகொண்டார்.

"நீ இயக்கத்திற்கு தெரியாமல் என்னோடு வந்திடு பிள்ளை"

என்று அம்மா கூறியபோது அவளுக்கு வந்ததே கோபம்.

"இப்படியெல்லாம் சொன்னியள் எண்டால் உங்களை இனிமேல் அம்மா எண்டு சொல்ல மாட்டன். போங்கோ. நான் நல்ல முடிவோடதான் இயக்கத் திற்கு வந்தனான். வரமாட்டன்."

என்ற அந்த உறுதியான சொல்லிலும் மிகுதியாகத் தெரிந்த முன் கோபம்– அது எங்களுக்கு பழக்கமானது.

அனைத்துப் பயிற்சிகளிலும் அவள் விண்ணி. ஓட்டப் போட்டிகளில் அவள்தான் முன்னுக்கு வருவாள் என்று நம்பிச் சொல்லலாம். ஏனைய பயிற்சி களிலும் அவளது வேகம் மூக்கில் விரல் வைக்கும்படியாக இருக்கும். அந்த வேகமும் திறமையும்தான் அவளை ஆரம்பப் பயற்சியாசிரியர் ஆக்கியது. மெலிந்த உயர்ந்த கறுத்த உருவம். செங்கதிர் ஓடும்போது அவளது ஓட்டமா அல்லது நாலுகால் பாய்ச்சலா என்றிருக்கும். கால் நிலத்தில் தரியாதபடி துரு துருத்தபடி திரிவாள்.

தாக்குதல்களம் அவளுக்கு மறக்க முடியாத அனுபவம். சீனன்குடாவுக்கு வேறு இலக்குக்கென அனுப்பப்பட்ட வளுக்கு அங்கு உலங்கு வானூர்தி தாக்கப்பட்ட நிகழ்வை தன் கண் முன்னால் பார்த்ததும், இனி வரும் தன் இலக்கிலும் ஒரு உலங்கு வானூர்தியை அழிக்கின்ற வாய்ப்பு கிடைக்கவேண்டும் என்று ஆசைப்பட்டு சொல்லிக் கொண்டிருப்பாள். அதனையே அவள் நீண்ட நாட்கள் சொல்லிக் கொண்டிருந் தாள். அதனை நினைத்துக் கொண்டே கடின மான பயிற்சிகளையும் செய்து முடித் தாள்.

இறுதியாக பரந்தன் – கிளிநொச்சி தாக்குதற் களம் வேறொரு இலக்காக அமைந்தபோது அவள் கவலைப்பட வில்லை.

"நாங்கள் உயிராயுதமாக எங்களை நினைக்கேக்கை ஒரு வெற்றியைப் பெற்றுக் கொடுக்க வேணும்"

என்றே சொல்லிவிட்டுப் போனாள்.

### கப்டன் தனா

### கலைநிதி பெருமாள்

*யாழ் மாவட்டம்*

*பிறப்பு:– 1978–09–26*

□ □ □

சீனன்குடா தாக்குதலுக்கான பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்த போது மங்கை வீட்டிலே விடுமுறையில் நின்றாள். தாய் உடல் நலமில்லாமல் இருந்த காரணத்தினால் அவளின் தாயைப் பார்க்க வீட்டில் நின்றிருந்தாள். வீட்டில் நின்றவளுக்கு பயிற்சி நடை பெற்றுக் கொண்டிருந்ததை அறிந்ததும் இருப்புக் கொள்ளவில்லை. அம்மாவின்

என்று செல்லமமாக அழைப்பதுண்டு. எந்த விடயத்தையும் சகித்துக் கொள்கின்ற தன்மை அவளிடம் இறுதி வரை இருந்தது. அவளது வீரச் சாவின் இறுதிக் கணத்திலும்கூட தனது இருகைகளையும் இழந்த நிலையில் இலக்குக்கு இடியாய் இடித்த இறுதிக் கணங்கள் எங்களுக்குள் நெருப்பெரிக்கும்.

### மேஜர் மங்கை

### நேசமலர் இரத்தினசிங்கம்

*கிளிநொச்சி மாவட்டம்*

*பிறப்பு:– 1974–03–28*

□ □ □

1990இன் ஆரம்ப நாட்கள் ஜெயராணியினது பயிற்சிக் காலங்கள். மன்னாரில் இருந்து பெண் புலியாய் அவள் பாசறை தேடிவந்த சிறிது காலங்களில் அவளது இடமும் சிங்கள இராணுவத்தினால் ஆக்கிர மிக்கப்பட்ட பிரதேசமாயிற்று. இதன் பின்னர் அவளுக்கும் அவளது குடும்பத் தினருக்கும் இடையில் தொடர்பு அற்றுப் போய்விட்டது. எங்காவது தெரிந்தவர்கள் இங்கிருந்து அங்கு செல்கின்ற நாட்களில் அம்மா தனது பிள்ளையை எங்கேயாவது காண முடிந்ததா என்று கேட்பாள். அவளும் உறவினர்களைக் காணக் கிடைக்கை யில் வீட்டுக்காரரைப்பற்றி சுகம் விசாரிப்பாள்.

"நான் சுகமாய் இருக்கிறதாய் சொல்லுங்கோ"

அவளது இயக்க வாழ்வின் நீண்ட நாட்களில் அவள் அம்மாவைக் காணவேயில்லை. அற்த ஏக்கமும் தவிப்பும் அவள் வீட்டைப் பற்றி நினைக்கின்ற கணப்பொழுதுகளில் வெளிப்பட்டுத் தெரியும்.

அது ஒரு சில கணங்களில்தான். அதன் பின்னர் அவள் வழமைக்குத்

அரசியல் அறிவு தொடக்கம் இராணுவப் பக்கங்கள் வரை நல்ல தெளிவு அவளிடம் இருந்தது. இயக்க நடவடிக் கைகளில் அவள் மக்களுடன் பழகிய வாய்ப்புகள் குறைவு என்றாலும் மக்களது சிக்கல்கள், துன்பங்கள், அவ லங்கள் பற்றி அடிக்கடி கேட்டறிந்து கொள்வாள். மக்களுக்காக உருகிப் போனதினால்தான் அவள் தன்னை ஒரு கரும்புலியாக வளர்த்துக் கொண்டா ளோ? ஏழைகளுக்காக இரக்கமுறுவதும் துன்பப்படுபவர்களைக் கைதூக்கி விடுவதும் போராளிகளுக்குரிய குணங்க ளாய் இருப்பினும் அவளிடம் அது இன்னும் மேலோங்கியிருந்தது.

ஒரு முறை இப்படித்தான் அது ஒரு மழை நாள். வன்னி மண்ணின் வீதிகள்தோறும் வெள்ளம் ஆறாய் ஓட ஆஷாவும் இன்னொரு தோழியும் உந்துருளியில் போய்க் கொண்டிருந் தார்கள். மேலே போகவிடாமல் தடுக்கும் மழை. நன்றாக நனைந்துவிட்டார்கள். பக்கத்திலே இருந்த பெட்டிக் கடையின் தாழ்வாரத்திலே உந்துருளியை நிறுத்தி விட்டு மழைக்காக ஒதுங்கினார்கள். கடை என்ற பெயரே தவிர பொருட்கள் அவ்வளவாக இல்லை. கடைக்கார அம்மா அவர்களைப் பார்த்து,

"வீட்டுக்குள்ளே வந்து இருங்கோ பிள்ளையள்"

என்று கூறி கூட்டிச் சென்றார். வீட்டுக் கூரை மேலே பொட்டுப் பொட் டாய்த் தெரியும் வானத்திலிருந்து மழை விழுந்து கொண்டிருந்தது. வீடு நனை வதற்கு இனி இடமில்லை.

"இருங்கோ பிள்ளையள் வாறன்"

என்றபடி அவர்களைப் பலகையில் இருக்கச் சொல்லிவிட்டு அந்த மழைக் குள்ளாக அம்மா போனார்.

பக்கத்து வீட்டிலிருந்து சீனிச் சரையோடு வந்து தேனீர் தயாரித்துக் கொடுத்தபோது ஆஷாவின் கண்கள் கலங்கிப் போயின.

"பாவம் சனங்கள் எவ்வளவு

அந்த வேகம்தான் அவளது இறுதிக் கணங்களிலும் . . . ஆவேச நெருப்பாய், கரிய புலியாய் எதிரியின் இலக்கு நோக்கிப் போயிருப்பாள். அந்த இறுதிக் கண அநுபவத்தைச் சொல்ல யாருளர்?

### கப்டன் செங்கதிர்

### ஜெயந்திரா ஜெயரட்ணம்

*யாழ் மாவட்டம்*

*பிறப்பு:– 1978–12–19*

□ □ □

தனா... தனது ஆரம்ப பயிற்சியை முடித்துக் கொண்டு சிறுத்தைப் படையணியில் இருந்த காலங்களில் பல்துறை சார்ந்த ஆற்றல்களாலும் தன்னை வளர்த்துக் கொண்டாள். கனரக ஆயுதப் பயிந்சிகள், கண்ணி வெடி சார்ந்த அறிவு, தொலைத் தொடர்பு என்ற ரீதியில் அவளது ஆற்றல் களம் விரிந்தது. இவையெல்லாம் அவளை ஆளுமையுள்ள போராளியாக மாற்றின.

அவள் ஒரு வேவுப் புலியும் கூட. வேவின் நுட்பங்கள் அவளுக்கு நன்கு தெரிந்திருந்தன. திறமையான வேவுப் புலியாக செயற்பட்டவளுக்கு நீண்ட சாதனை ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற ஆவலும் துணிவும் கரும்புலியாகச் செல்வதற்கு உந்துதல் அளித்தது. எல்லோரையும் போலவே கரும்புலிக்கான பதில் கடிதம் தலைவரிடம் இருந்து கிடைக்கப் பெற்றதும், கடினமான பயிற்சியை எடுத்தவளுக்கு சீனன்குடா தாக்குதல் களம் முதலாவதாக செல்வதற்கான இலக்காக்கப்பட்டது. இலக்குகள் கிடைப் பதும் சந்தர்ப்பங்களில் நழுவிப் போவ தும் வழமையான நிகழ்வாக அவளுக்கு நடப்பதானாலும், சீனன்குடா

உடல் நிலை நன்றாக இருந்திருப்பின் அவளும் அங்கு நின்று பயிற்சி எடுத்துக் கொண்டிருப்பாள்.

நீண்ட நேரங்கள் இருந்து யோசிப பாள். ஒருபுறம் அவளது அம்மா, மறுபுறம் சண்டைக்கான அவளது இலக்கு. விடுமுறையில் நின்ற மூன்றாம் நாள் அம்மா ஓரவு நல்ல நிலையில் இருந்தார்.

'அம்மாவுக்கு இனி சுகம் வந்திடும் தானே'

என்று களத்திற்கு திரும்புவதற்கு முடிவெடுத்தாள். அம்மாவுக்கு அவளைப் பற்றித் தெரியும். அவள் முடிவெடுத்தால் அவளை மாற்ற முடி யாது என்பதை நன்கறிந்திருந்தார். அம்மாவிடம் விடைபெற்றுப் போய் விட்டாள்.

சீனன்குடாவில் இலக்கு அவளுக்கு கிடைத்தது. அவள் போக வேண்டிய நாளும் வந்தது.

"என்ர அம்மாவைப் போய்ப் பாருங்கோ"

போகும்போது தோழிகளிடம் சொல்லி விட்டுப் போனாள்.

சென்ற வேலை முடிந்து அவள் திரும்பி வந்தபோது, அவள் அம்மா போயேவிட்டாள். அம்மாவின் சாவுச் செய்தியை தயங்கித் தயங்கித் தோழிகள் கூறியபோது விம்மி விம்மி அழுத அவளை தேற்ற முடியவில்லை.

அவளிடம் எல்லோரும் அன்பைச் சொரிந்தார்கள். அவளுக்கு எல்லோரிட மும் அன்பு செய்யத் தெரிந்திருந்தது. எல்லோரையும் அரவணைத்துச் செல் கின்ற பண்பு நிறைந்திருந்தது. மங்கை நீண்ட காலங்கள் பொறுப்பாளராக இருந்ததாலோ அவளது அமைதியான செயற்பாட்டாலோ மங்கை எல்லோருக் கும் அம்மாவாகிப் போனாள். இதனால் எல்லோரும் மங்கையை 'மங்கம்மா'

திரும்பிவிடுவாள். ஓயாத பயிற்சிகளிலும் கடின உழைப்பிலும் சோர்வு இன்றி ஈடுபடுவாள். தனக்கு நெருங்கிய தோழி களிடம் மட்டும் தன்னை வெளிப்படுத் திக் கொள்வாள். மற்றைய நேரங்களில் அவளது சுபாவம் அமைதியானது.

சிறந்த வேவுப் புலியாய், பாதை காட்டியாய் அவள் சென்ற சண்டைக் களங்கள் மறக்கமுடியாதவை. அவற்றை யெல்லாம் பெயர் சொல்லும்படியான அவளது செயற்பாடுகளால் எங்களுக்குள் நிறைந்து போனாள். அவளது தோழி களுக்கு அவள் மதிப்புக்குரிய போராளி. அதிர்ந்து பேசத் தெரியாதவள். எவரது சிக்கல்களுக்குள்ளும் தலையைக் கொடுத்து தலையைக் குனியாதவள். இன்னும் அவளைப் பற்றிக் கூற நிறைய உண்டு. நீண்ட நினைவுகளுமுண்டு:

### மேஜர் ஜெயராணி

### சாந்தி நடராசா

*மன்னார் மாவட்டம்*

*பிறப்பு:– 1973–11–18*

□ □ □

ஆஷா ஒரு பயிற்சி ஆசிரியர். ஓட்ட மைதானத்தில் ஒலிக் கும் அவளது விசில் சத்தமும் குரலும் அவளைப் போலவே கம்பீரமாக இருக் கும். ஆஷாவிடம் பயிற்சி எடுத்தவர்கள் என்று சொல்லிக் கொள்ள நிறையப் பிள்ளைகள் அவளது இருப்பாய், அவளது கனவாய் எங்களுக்குள் ஆஷா நீண்ட வரலாறு.

பயிற்சி ஆசிரியருக்கே உரிய

கஸ்ரப்படுதுகள்.

மழை கொட்டிக் கொண்டிருந்தது. ஆஷா அழுதுகொண்டிருந்தாள். அந்த ஆவேச நெருப்பும் மக்கள் மேல் வைத்த மிகுதியான பற்றுமே அவளைத் தேசத்தின் புயல்களாக்கியது. உடல் முழுக்க விழுப்புண் ஏந்தி தொய்ந்த நிலையிலும் கூட அந்தக் கடுமையான பயிற்சிகளை எல்லாம் எடுக்க வைத்தது.

அவளது இறுதி நாட்களில் அந்தத் தாக்குதலுக்கான பயிற்சியும் பழுவும் கடினமாக இருந்தன. உடல் இடம் கொடுக்காத நிலையிலும்கூட

"அண்ணை எங்களுக்கு தனிய இலக்கு தந்திருக்கிறார். அவற்ற நம்பிக்கையின்படி திறமையாக செய்ய வேணும்"

என்று சொல்லிக் கொண்டே பயிற்சி எடுத்தாள். அந்த உறுதியோடும் பெரும் கனவோடும் தான் போய் முடிந்தாள். அந்த சண்டைக் களமும் கடின பயிற்சி நாட்களும் மறக்க முடியாதவை. நினைவுப் பறவையின் சிறகு முளைத்து உயரப் பறந்தபோது கண்களுக்குள் நீர் முட்டியது. இரத்தமும் சதையுமாக அவள் இனி இல்லை என்பது உண்மை. எனினும் நினைவுகளில் எம்முடன் வாழ்கிறாள் என்பதும் உண்மை.

### மேஜர் ஆஷா

### சிவயமுனா வேலுப்பிள்ளை

*யாழ் மாவட்டம்*

*பிறப்பு:– 1976–11–11*

□ □ □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சகாப்தம் படைத்த ஸ்ராலின்கிராட் 7




மார்ஷல் சுய்க்கோவ்

இது தவிர எரி பொருள் கலவை அடங்கிய பாட்டில்களையும் டாங்கி எதிர்ப்பு எறிகுண்டுகளையும் ஒவ்வொரு போர் வீரனுக்கும் அளிக்க முயன்றோம். இங்கே குறி தவறாத் துப்பாக்கி வீரர்கள், பொறியியல் பிரிவு வீரர்கள், இரசாயன நிபுணர்கள், ஏராளமான மருந்துகளுடன் மருத்துவப் பிரிவினர் ஆகியோரும் இருந்தனர்.

துப்பாக்கிப்படை பிரிவுகளின் கமாண்டர்கள் ஆதாரத் தளங்களின் (தற்காப்பு மையங்களின்) தலைமை அதிகாரிகளாயிருந்தனர். அவர்களின் கீழ் மூடிய இடங்களிலிருந்து இயங்கிய பீரங்கிப்பிரிவின் கண்காணிப்பு மையங்கள் இருந்தன.

கட்டிடத்தின் உறுதி நகரத்தில் அது இருந்த இடம் ஆகியவற்றிற்கேற்ப தற்காப்பு கட்டிடத்தில் சுடும் சாதனங்கள் இருந்தன. பல மாடிக்கட்டிடங்களில் பல அடுக்கு தற்காப்பு ஏற்பாடு செய்யப் பட்டது. அரை நிலவறைகளிலும் கீழ் மாடிகளிலும் இருந்து தெருவோரமாகச் சுட ஏற்பாடு செய்யப்பட்டது; மேல் மாடிகள், பரணிலிருந்த இயந்திரப் பீரங்கிகள் மேலிருந்தபடியே டாங்கிகள், சாலைகள், முற்றங்கள், அருகிலுள்ள கட்டிடங்கள், தொலைதூர இலக்குகள் ஆகியவற்றை நோக்கிச் சுட்டன. நேரடியாகச் சுடும் இயந்திரப் பீரங்கிகளும் கனரக இயந்திர பீரங்கிகள் சிலவும் கீழ் மாடிகளிலிருந்தன. சில சமயங்களில் தொலை தூர இலக்கைச் சுட பெரிய இயந்திர பீரங்கிகள் மேல் மாடிகளில் வைக்கப்பட்டன. துப்பாக்கி வீரர்கள் கட்டிடம் பூராவுமிருந்தனர். நேரடியாகச் சுடும் இயந்திர பீரங்கிகள், டாங்கிகள், பக்கவாட்டிலிருந்தும் இடை வழிகளிலிருந்தும் கட்டிடத்தை அணுகும் வழிகளைப் பாதுகாப்பதற்கான கனரக இயந்திர பீரங்கிகள் ஆகியவை கட்டிடங்களுக்கு வெளியே வைக்கப் பட்டன.



நகரத்தில் நடந்த தெருச் சண்டைகளின் தன்மை, காலாட் படைப்பிரிவுகளுக்கு ஏராளமான தானியங்கித் துப்பாக்கிகள், எறிகுண்டுகள், வெடிமருந்துக் கலவை யடங்கிய பாட்டில்கள் ஆகியவற்றை வழங்கும்படி செய்தது. எல்லாத் திசைகளிலும் சுடுவதைப் பரவலாக மாற்றுவதை கணக்கில் கொண்டு பல சேம இருப்பு மற்றும் தற்:காலிக சுடுமிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

சுடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்த போது, குறுகிய தூரத்தைச் சுட காலாட்படைத் துப்பாக்கிகளை மட்டுமின்றி, நேரடியாகச் சுடும் பீரங்கிகளையும் பரவலாகப் பயன் படுத்துவது கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது. மார்டர் பீரங்கிகளும் — இவை செங்குத்தான மறைவுகளிலிருந்த எதிரியைத் தாக்கின — அடிக்கடி பயன்படுத்தப்பட்டன.

நகரத்தின் உள்ளே நிலவிய டாங்கி எதிர்ப்பு பாதுகாப்பிற்கு விசேஷ அம்சங்கள் இருந்தன. டாங்கிகளுக்கு எதிரான சண்டை குறுகிய தூரத்தில் நடந்தது. வெடிமருந்துக் கலவை அடங்கிய பாட்டில்கள், டாங்கி எதிர்ப்புத் துப்பாக்கிகள், எறிகுண்டுகள் ஆகியவற்றைக் கொண்டிருந்த டாங்கி எதிர்ப்பு வீரர்களுக்கு முக்கியத்துவம் தரப் பட்டது. பெரும்பாலும் மறைவிடங்களிலிருந்தபடி டாங்கிகளை நோக்கிச் சுடப்பட்டது. இதற்காக வேலி முறிவுகள், சுவரிலிருந்த ஓட்டைகள், வீட்டு வாயில்கள், கதவுகள், ஜன்னல்கள் போன்றவை பயன்படுத்தப்பட்டன.

ஆதாரத் தளத்திலும் தற்காப்பு மையத்திலும், எல்லாப் பக்கங்களிலிருந்தும், ஏன் பின்னணியிலிருந்தும் வரும் எதிரி டாங்கி தாக்குதல்களை முறியடிக்கும் பொருட்டு நேரடியாகச் சுடுவதற்காக் பீரங்கிகள் வைக்கப்பட்டு வட்டமான டாங்கி எதிர்ப்பு தற்காப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. பீரங்கிகள் போதாமலிருந்த போது, இடம்விட்டு இடம்செல்லும் சிறு யூனிட்டுகள் அங்கும் இங்கும் நகரப் போதுமான வழிகளும், கண்ணிவெடித் தடைகளும் டாங்கி எதிர்ப்பு துப்பாக்கிகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. தனியாக நின்ற பேட்டரிகளின் சுடுமிடங்கள் டாங்கி எதிர்ப்பு வலுவான மையங் களாக்கப்பட்டன. ஒரு டாங்கி ஆபத்து திசையைப் பாதுகாக்கும் ஒரு சில இத்தகைய மையங்கள் டாங்கி எதிர்ப்பு மண்டலமான இணைந்தன.

படையின் தலைமையகம் உட்பட எல்லாத் தலைமையகங்களும், கட்டளை மையங்களும், பீரங்கிகள் நின்ற இடங்களும் ஆதாரத் தளங் களாக்கப்பட்டன. சுருங்கக் கூறின் முன்னணி முதல் வோல்கா கரை வரை தற்காப்பு உருவாக்கப்பட்டது. எல்லாப் பின்னணி, சப்ளை யூனிட்டுகளும் போர்க் குழுக்களில் இருந்தன. அவற்றிற்குத் தற்காப்புப் பகுதிகள் ஒதுக்கப் பட்டிருந்தன.

சண்டைகளின் போக்கில் தற்காப்பு தொடர்ந்து மேம்படுத்தப்பட்டது. ஒவ்வொரு முறை இடை நேரம் கிட்டிய போதும் அது தற்காப்பை வலுப்படுத்த, சுடும் முறைகளை மேம்படுத்தப் பயன்படுத்தப்பட்டது.

தற்காப்பு சுறுசுறுப்பாக இயங்க விசேஷ முக்கியத்துவம் தரப்பட்டது. எங்களுடைய போர் வரிசைகளினுள் ஒவ்வொரு முறை எதிரி பிளந்துவந்த போதும் சுட்டும், எதிர்த் தாக்குதல்களைத் தொடுத்தும் — இவை சாதாரணமாகத் திடீரென எதிரியின் பக்கவாட்டுகளின் மீதும் பின்னணியின் மீதும் தொடுக்கப்பட்டன — பிளவை சரிசெய்ய முயன்றோம்.

சாதாரணமாக எதிர்த்தாக்குதல்கள் எதிரிக்குப் பேரிழப்பை ஏற்படுத்தின. குறிப்பிட்ட திசையில் தாக்குதலைக் கைவிட்டு, எங்களுடைய தற்காப்பில் பலவீனமான இடங்களைத் தேடுமாறு எதிரி அடிக்கடி நிர்ப்பந்திக்கப்பட்டான். இதனால் நேரம் வீணாயிற்று. தாக்குதல் வேகம் குறைந்தது.

தாக்குதலுக்குத் தயாராகும் எதிரி படைத்திரட்டின் பக்கவாட்டுப் பிரிவுகளை அல்லது அதற்கு நேருக்கு நேராக நாங்கள் சில சமயங்களில் தாக்கினோம். எதிரிக்கு இழப்பேற்படுத்துவதை விட பீரங்கிகள், விமானங்களின் ஆதரவோடு துப்பாக்கிப்படைப் பிரிவுகள், டாங்கிகளால் திடீரெனத் தாக்கி, எதிரியின் ஆரம்ப நிலைக்குள் புகுந்து, எதிரியின் போர் வரிசைகளைக் குழப்புவதும், எதிரியின் தாக்குதலைக் குலைத்து, நேரத்தை வெல்லுவதும்தான் இந்நடவடிக்கைகளின் நோக்கமாயிருந்தன.

எதிரி பிளந்துகொண்டு முன்னேறினாலும், எங்களுடைய தற்காப்பின் போர் வரிசைகள் பாசிஸ்டுகளுக்கு எதிர்ப்பைக் காட்டின; சண்டை பூராவும் எதிரியின் பலவீனமான இடங்கள், பக்கவாட்டுப் பகுதிகள் மீது உள்ளாழத்திலிருந்து இப்போர் வரிசைகளால் தாக்க முடிந்தது.

எதிரியின் டாங்கிகளை தற்காப்பின் ஆழத்திற்குள் செல்ல அனுமதிக்க எங்களுடைய துருப்புகள் அஞ்சவில்லை. ஏனெனில், அங்கே இரண்டாவது படை வரிசைகளில் டாங்கி எதிர்ப்பு மையங்களும் தடைகளும் இருந்தன. ஆனால், இயந்திரப் பீரங்கிகளால் சுட்டு, எதிரியின் காலாட்படையை டாங்கிகளிடமிருந்து பிரிக்கவும் அதை முன்னணியிலேயே வீழ்த்தவும் முயன்றோம். முன்னால் வந்த டாங்கிகளை, நிலவறைகளிலும் மறைகுழிகளிலும் இருந்த டாங்கி எதிர்ப்புப் போர் வீரர்கள் சுட்டுத் தள்ளினர். சில நேரங்களில் எதிரி டாங்கிகள் டாங்கி எதிர்ப்பு மையங்கள், டாங்கி எதிர்ப்பு பீரங்கிகள் இருந்த இடங்கள் மீது நேரடியாக வந்து மோதின.

நாங்கள் மறைவான வலுவிடங்களில் உட்கார்ந்திருக்க, எதிரி தெருக்களிலும் சதுக்கங்களில் இருந்து நல்ல இலக்காக விளங்கியது. எங்களுக்கு அனுகூலமான தாயிருந்தது.

பிளந்துகொண்டு முன் வந்த எதிரிப் படையினரின் தலைகளில் குறி தவறாத் துப்பாக்கி வீரர்கள், இயந்திர பீரங்கி வீரர்கள் ஆகியோரின் குண்டுகளும், எதிரி மீது விழுவதற்காக விசேஷமாகத் தகர்க்கப்பட்ட கட்டிடங்களின் இடிபாடுகளும் விழுந்தன.

எதிரி ஏதாவது கட்டிடத்தை அல்லது கட்டமைப்பைப் பிடித்தால், இரண்டாவது படை வரிசைகளும் சேம இருப்புகளும் அங்கிருந்து எதிரியை விரட்டி, எதிர்த்தாக்குதலால் நிலவரத்தை சீர்ப்படுத்தின.

இரண்டாவது படை வரிசைகள் தற்காப்பு மண்டலத்தின் ஆழத்தில் ஆதாரத் தளங்களில் இருந்தன; இவை எதிரி தாக்கக் கூடிய திசைகளில் எதிரியைத் தடுத்து மடக்கின. எதிர்த்தாக்குதல் தொடுக்க இவை எப்போதும் முழு பலத்துடன் தயாராக இருந்தன.

எதிர்த்தாக்குதலுக்குப் போதுமான பலம் இல்லாத போது, சேம இருப்பு கைவசமிருக்குமாறு போர் வரிசைகள் அமைக்கப்பட்டன; இந்த சேமப் படைப்பிரிவுகள் மிக முக்கியமான, உறுதியான கட்டிடங்களில் நிறுத்தப் பட்டன.

நிலவரம் அனுகூலமற்றதாகும் போது இரண்டாவது படை வரிசைகளும் சேம இருப்புகளும், ஆபத்தான திசைகளில், தாம் தயார்படுத்திய ஆதாரத் தளங்களில் தற்காப்பிற்கு மாறின.

தற்காப்பு நிலைகளுக்கு ஏற்பாடு செய்ததோடு, கூட இரண்டாவது படை வரிசைகள் (சேம இருப்புகள்) தாமிருந்த பகுதியிலும் அருகிலிருந்த துருப்புகளுக்கு உதவியாகவும் எதிர்த் தாக்குதலுக்கான திசையை தயார் படுத்தினர். அதாவது, இடமாற்றங்களின் ஒத்திசைவிற்கு ஏற்பாடு செய்தனர் —

தொடரும்.....

www.tamilarangam.net



# அமெரிக்க நீதிமன்றத் தீர்ப்பு

# மக்கள் மத்தியில் இருந்த அச்சங்களைப் போக்கியுள்ளது

**கடந்த 08:06:98 அன்று அமெரிக்காவின் கலிபோர்னியா மாவட்ட நீதிமன்றத்தில் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் கடுமையான மரணதண்டனைச் சட்டம் தொடர்பாக அமெரிக்க இராஜாங்க அமைச்சுக்கெதிராக தமிழ் அமைப்புக்கள்தொடுத்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக இவ் வழக்கில் கடமையாற்றிய வழக்கறிஞர் திரு. விசுவநாதன் உருத்திரகுமாரன் அவர்கள் வழங்கிய செவ்வியை இங்கு தருகிறோம்.**

**கேள்வி:- *இவ் வழக்கின் பின்னணி பற்றி ஏதும் கூற முடியுமா?***

பதில்:- 1997 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8ம் திகதி, அமெரிக்க இராஜாங்க அமைச்சரின் பிரகடனத்தின் பேரில் 'பயங்கரவாத இயக்கங்களாக' பட்டியலிடப்பட்ட 30 அமைப்புக்களில் தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் உள்ளடக்கப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். இப் பிரகடனத்தின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு அமெரிக்காவில் தடை விதிக்கப்பட்ட தாக பரவலாகக் கருதப்பட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக அல்லது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக எவற்றைச் செய்யலாம், எவற்றைச் செய்ய முடியாது என்பது தொடர்பான குழப்ப நிலையும் சிலர் மத்தியில் நிலவியது.

உண்மையில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு பொருண்மிய உதவி (Material support) அமெரிக்க மண்ணிலிருந்து வழங்கப்படுவதனையே இப்பிரகடனம் தடுத்திருந்தது. இப்பொருண்மிய உதவியில் மருத்துவ மற்றும் மதம் சார்ந்த உதவிகள் மட்டுப்படுத்தப் படவில்லை. மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளோ அல்லது அங்கத்தவர் களோ அமெரிக்காவிற்கு செல்வதற்கும் அனுமதி மறுக்கப்படக்கூடிய நிலை இருந்தது.

இச்சூழலில், அமெரிக்க இராஜாங்க அமைச்சின் முடிவினை எதிர்த்து இரு வழக்குகள் அமெரிக்க நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டன. இதில் ஒரு வழக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கு வாசிங்டன் D.C யில் தாக்கல் செய்யப்பட்டது. மற்றைய வழக்கு அமெரிக்காவிலுள்ள தமிழ் அமைப்புக்களினால் தாக்கல் செய்யப் பட்டது. தமிழ் அமைப்புக்களினால் கலிபோர்னியா மாநிலத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கைப் பற்றியே தற்போது நாங்கள் பேசுகிறோம்.

**கேள்வி:- *இவ்விரு வழக்கு களுக்கும் இடையிலேயான வேறுபாடுகள் எவை?***

பதில்: தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, 'பயங்கரவாத அமைப்புக்களின்' பட்டியலில் விடுதலைப்புலிகள் அமைப் பினை உள்ளடக்கியதனை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

அமெரிக்காவில் உள்ள தமிழ் அமைப்புக்களினால் தாக்கல் செய்யப் பட்ட வழக்கு, அமெரிக்காவின் அரசியல் யாப்பு தமக்கு வழங்கியுள்ள சுதந்தி ரத்தை சட்டம் பாதிக்கிறது எனும் அடிப்படையிலான வழக்காகும். இச்சட் டத்தின் மூலமே இராஜாங்க அமைச்சின் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது.

**கேள்வி:- *எந்த வகையில் அரசியல் யாப்பினால் வழங்கப்பட்ட சுதந்திரம் மீறப்படுகிறது என வாதிடப்படுகின்றது என்பது பற்றி சற்று கூற முடியுமா?***

பதில்:- நிச்சயமாக, அமெரிக்காவின் அரசியல் யாப்பினில் உறுதி செய்யப்பட்ட Freedom of Association எனும் உரிமையினை இச்சட்டம் மீறுகின்றது என்பதே அடிப்படையான சட்டவாதம். அமெரிக்காவில் உள்ள தமிழ் அமைப்புக்களுக்கும், தமிழ் மக்களுக் கும் தாம் விரும்பும் மனிதாபிமானப் பணிகளுக்கு உதவும் உரிமை உண்டு. இந்த வகையில் விடுதலைப்புலிகள் அமைப்பினால் மேற்கொள்ளப்படும் மனிதாபிமான அடிப்படையிலான செயற்பாடுகளுக்கு விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு பொருண்மிய உதவி செய்வது என்ற தெரிவினை மேற் கொள்ளும் உரிமை உண்டு. இந்த உரிமையினை தடை தடுப்பதினால், அத்தடை கொண்டுவருவதற்கு மூலமாக இருந்த சட்டம் அரசியல் யாப்பினால் வழங்கப்பட்ட உரிமையினை மீறுவதாக சட்டவாதம் மேற்கொள்ளப் படுகின்றது.

**கேள்வி:- *கடந்த யூன் மாதம் 8ம் திகதி கலிபோர்னியா மாவட்ட நீதிமன்றத்தில் என்ன அடிப்படையில் வழக்கு நடைபெற்றது?***

பதில்:- தமிழ் அமைப்புக்களின் வழக்கு தொடர்பாக விடுதலைப் புலிகள் அமைப்பு மீது இருக்கும் தடையினை தற்காலிகமாக நீக்கும்மாறு நாம் மறுதாக்கல் செய்திருந்தோம். அம்மனு மீதே அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இத்தீர்ப்பின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் தொடர்பான அரசியல் செயற்பாடுகளுக்கு எவ்வித தடையும் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டது. இதன்மூலம் மக்கள் மத்தியில் இருந்த குழப்பம் தீர்க்கப்பட்டுள்ளது. இருப்பி னும் பொருண்மிய உதவி வழங்குவது தொடர்ந்தும் தடுக்கப்பட்டுள்ளது.

**கேள்வி:- *அடுத்த கட்டமாக என்ன செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது?***

பதில்:- அடுத்த கட்டமாக விடுதலைப்புலிகள் அமைப்புக்கு பொருண்மிய உதவி வழங்குவதற்கு விதிக்கப்பட்ட தடையினை நீக்குமாறு மேன்முறையீட்டு நீதின்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

**கேள்வி:- *விடுதலைப்புலிகள் அமைப்புத் தொடர்பான அரசியல் செயற்பாடு என்று கூறும்போது எத்தகைய செயற்பாடுகளைக் கூறுகிறீர்கள்?***

பதில்:- தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாகவோ விடுதலைப் புலிகள் அமைப்புத் தொடர்பாகவோ கூட்டங்கள், ஊர்வலங்கள், கருத்தரங்கு கள், மாநாடுகள், எதுவும் செய்யப்பட லாம். விடுதலைப்புலிகள் அமைப்பின்



திரு. விசுவநாதன் உருத்திரகுமாரன்

வெளியீடுகள் விநியோகிக்கப்படலாம். தமிழீழத் தேசியக் கொடியோ அல்லது விடுதலைப்புலிகள் அமைப்பின் கொடியோ எங்கும் ஏற்றப்படலாம் அல்லது பறக்கவிடப்படலாம். மாவீரர் நாள் உட்பட போராளிகளின் நிகழ்வுகள் நடாத்தப்படலாம். இப்படியாக பொருண் மிய உதவி தவிர்ந்த ஏனைய எதுவும் செய்யப்படலாம்.

**கேள்வி:- *விடுதலைப்புலிகள் அமைப்பின் பிரதிநிதிகள் எவரும் அமெரிக்காவில் செயற்படலாமா?***

பதில்:- அமெரிக்காவில் வதிவிட உரிமையுள்ள விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் எவரும் சுதந்திரமாக அரசியற் செயற்பாடுகளை மேற்கொள்ள லாம். வெளியில் இருந்து உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொள்வதற்கு தடை தொடர்ந்தும் இருக்கின்றது.

**கேள்வி:- *இத்தீர்ப்பினை எவ்வாறு கருதுகிறீர்கள்?***

பதில்:- இதனைப் பகுதி வெற்றியா கக் கருதலாம். பிரகடனம் மூலம் தடுக்கப்பட்ட விடயங்கள் முழுமையாக நீக்கப்படாவிட்டாலும், சட்டரீதியாகச் செய்யக்கூடிய விடயங்களை இத்தீர்ப்பு தெளிவுபடுத்தியிருக்கிறது. இது மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கக்கூடிய அச்சத்தினைப் போக்கியுள்ளது.

**கேள்வி:- *இவ்வழக்கில் வழக்காடும் வழக்கறிஞரைப் பற்றி சற்றுக் கூறமுடியுமா?***

பதில்:- இவ்வழக்கில் டேவிட் கோல் எனும் சட்டப் பேராசிரியர் எமக்காக வாதிடுகிறார். இவர் இத்துறையில் பிரபலம் பெற்ற நிபுணர் ஆவார். ஜோர்ஜ் வோஷிங்டன் பல்கலை க்கழகத்தின் பேராசிரியராகிய இவர் இவ்வழக்கில் வாதிடுவது எமக்கு மேலதிக பலத்தைத் தருகின்றது.

**கேள்வி:- *இவ் வழக்கின் போக்கு எப்படி அமையக் கூடும்?***

பதில்:- இது மேன் முறையீட்டு நீதி மன்றத் தில் கிடைக்கும் தீர்ப்பி னைப் பொறுத்தது. மேன்முறையீட்டு நீதிமன் றத்திற்கு அடுத்ததாக அதி உச்ச நீதிமன்றம் (Supreme Court) வரை கூட இவ்வழக்குச் செல் லலாம். மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எமக்குச் சாதகமான தீர்ப்பு கிடைப்பின், இராஜங்க அமைச்சும் இவ் வழக் கினை அதி உச்ச நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லக் கூடும்.

**கேள்வி:- *இறுதியாக இச்சட்டப்போர் பற்றி ஏதா வது கூறவிரும்புகிறீர் களா?***

பதில்:- அமெரிக்க மண்ணில் சட்டரீதியாக தமிழ் மக்கள் தமது உரிமைக்காகப் போராடு வதற்காக தமிழ் அமைப் புகள் இவ் வழக்கைத் தாக்கல் செய்திருந்தன. இவ் விடயத்தில் தமிழ் மக்களின் ஒற்றுமை மிகவும் குறிப்பிடப் பட வேண்டியதாகும். அமெரிக்காவில் உள்ள மிக முக்கியமான அமைப்புகள் யாவும் இவ் விடயத்தில் ஓரணியில் நின்றன. விடுதலைப்புலிகள் அமைப்புத் தொடர்பான அரசியல் செயல்பாடுகளை செய்வதற்கான உரிமை உறுதிப்படுத்தப் பட்டமையின் ஊடாக, சிறிலங்கா அரசும், பேரினவாதச் செய்தி ஊடகங்களும் கிளப்பிய 'பயங்கரவாதப் பீதி' தணிக் கப்பட்டுள்ளது.

மேலும், கருத்துச் சுதந்திரத்தின் கழுத்து சிறிலங்காவில் எவ்வாறு நெரிக்கப்படுகிறது என்பதனையும் இத் தீர்ப்பு நினைவுபடுத்துகிறது. தமிழீழம் தொடர்பாகவோ அரசியற் செயற்பாடு களை சிறிலங்காவின் அரசியலமைப்புச் சட்டத்தின் 6வது திருத்தச் சட்டம் முழுமையாக சட்டரீதியில் தடுப்பத னையும் சுட்டிக் காட்ட வேண்டி யுள்ளது. □

www.tamilarangam.net



# சிறுகதை

வாடை பெயர்ந்துவிட்டது. ஆனாலும் சோளகம் தொடங்கவில்லை. மெல்லிய காற்று அலைகளை அளவாக உயர்த்தி தாழ்த்திக் கொண்டிருந்தது. கடற்கரையில் உயர்ந்து நிற்கும் தென்னைகளை காற்று தழுவிச் சென்றது.




கரையில் நண்டுகள் தங்கள் வளைகளை விட்டு வெளியே வந்து உலாவின. அலைவந்து கரையைத் தழுவும்போது வளையினுள் ஓடி ஒளிந்தன.

கிட்டிய தூரத்தில் இரு கட்டுமரங்களில் மீனவர்கள் தூண்டில் போட்டு மீன் பிடித்தனர். கட்டுமரங்களிலிருந்து சற்றுத் தூரத்தில் கடற்புலிகளின் நான்கு படகுகள் நங்கூரமிட்டு நின்றன. அலைகளின் தாலாட்டில் படகுகள் ஒரே சீராக ஆடிக் கொண்டிருந்தன. படகுகளின் முன்னும் பின்னும் கரிய சுடுகலன்கள் எதிரியின் இலக்கை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டி ருந்தன.

மூன்று படகுகளின் இயந்திரங்கள் இயங்கிக் கொண்டிருந்தன. ஒரு படகு மற்றையதுகளை விட்டு தள்ளி நின்று கொண்டிருந்தது. அதன் சள்ளைப் பகுதியில் 'நெடுமாறன்' என்னும் எழுத்துக்கள் தெளிவாகத் தெரிந்தன. அப்படகு கடலின் நிறத்திற்கு ஏற்றவாறு வர்ணம் பூசப்பட்டிருந்தது. அது போலவே மற்றைய படகுகளும் வர்ணம் தீட்டப்பட்டிருந்தன. எதிரியின் நடமாட்டம் எங்காவது தெரிகிறதா என்பதை அப்படகில் இருந்தவர்கள் அவதானித்துக் கொண்டிருந்தார்கள்.

நெடுமாறன் மீது அலை ஒன்று வந்து மோதியது. அதனால் இயந்திரங்களை சரிபார்த்துக் கொண்டு நின்றவர் தடுமாறி பக்கக் கம்பியை பிடித்துவிட்டு படகின் ஆட்டம் நின்றவுடன் மீண்டும் தனது வேலையை தொடர்ந்தார். சுடுகலனுக்கு எண்ணெய் விட்டுக் கொண்டிருந்தவர் தன்து வேலை முடிந்ததும் சுடுகலனை றபர் சீற்றினால் மூடினார்.

அப்படகின் அணியத்தில் இருந்து கடலையே வெறித்தவண்ணம் இருந்தான் நிமல்.

"நிச்சயமாக இம்முறை இரண்டு டோறாவைத் தன்னும் அமிழ்த்த வேணும். அப்பத்தான் கொஞ்ச நாளைக்காவது சனங்கள் கடலில் நிம்மதியாக திரியலாம். வளிச்சலுக்குக் கூட வள்ளங்கள் போகலாம். பாவம் இந்த நேவியால சனம் படுகிறபாடு."

கரைக்கு அண்மையில் நின்று தூண்டில் போடும் மீனவரையே அவனது கண்கள் வெறித்தன. ஒரு பேரிய அலை வந்து படகின் மீது மோதியது. கடல் நீரை படகினுள் அள்ளிக் கொட்டியது. மீனவரை வெறித்து சிந்தித்தவனின் சிந்தனை கலைந்தது. வாயில் உப்புக் கரித்தது. வெளியில் குனிந்து உப்பைத் துப்பிவிட்டு தூரத்தே வானம் கடலைத் தொடும் இடத்தை நேக்கினான்.

நடக்கப்போகும் சண்டையை வழிநடத்தும் பொறுப்பு நிமலிடம் ஒப்படைக்கப்படுகிறது. இச் சண்டையை வெற்றிகரமாக முடிப்பது அவருடைய பொறுப்பு. தொடுவானத்தை நோக்கிய வனின் நெஞ்சில் தளபதியின் குரலே திரும்பத் திரும்ப ஒலித்தது. அதனால் அவனது சிந்தனை பல கோணங்களில் ஓடியது.

"நிமலண்ணை கே.கே.எஸ்ஸிலிருந்து நான்கு டோறா றிங்கோ நோக்கி வருது". போராளி ஒருவரது குரல் சிந்தனையைக் கலைத்து அவனைத் துரிதமாக செயற்பட வைத்தது.

படகில் வோக்கி இருக்கும் இடம் நோக்கி ஓடி, வோக்கியை இயக்கினான். அதேசமயம் படகின் இயந்திரங்களும் நீரைக் கிழித்தன.

வானளாவி உயர்ந்து நின்ற இராஜகோபுரத்தின் மேலிருந்த காகம் கோவிலின் உச்சிக்கால பூசைக்கான மணியோசை கேட்டதும் பறந்து போனது. கோயிலின் வெளி வீதியில் நின்றோர் தங்களை மறந்து சில கணம் கடவுளை வணங்கினர்.

மணியோசை கேட்டதும் 'அம்மாளாச்சி' என மனதில் அம்மனை வணங்கியபடி பார்வதி அவசர அவசரமாக கோயிலை நோக்கி நடந்தாள். கோயில் கிணற்றில் கால் கழுவிவிட்டு இராஜகோபுரத்தை நோக்கி கைகூப்பிக் கும்பிட்டாள்.

மணியோசை கேட்டதும் பறந்த காகங்கள் மீண்டும் கோபுரத்தையே தஞ்சம் அடைந்தன.

'தோடுடைய செவியன் விடையேறியோன்' கோயில் பிரகாரத்தில் அமர்ந்திருந்த கிழவர் ஒருவர் மனமுருகிப் பாடினார்.

"சதய நட்சத்திரம். கும்பராசி. பெயர் ரகுவரன். ஒரு அரிச்சனை செய்யுங்கோ ஐயா"

பார்வதி காசைக் கொடுத்ததும் சிரித்தபடி ஐயர் காசை வாங்கினார்.

மந்திரங்கள் பல உச்சரித்து முடிந்ததும் 'ஓம்' எனும் வடிவத்தில் பஞ்சாலாத்தியை இறைவனுக்கு காட்டிய பின் பார்வதியிடம் நீட்டினார். அதைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு ஐயர் கொடுத்த பிரசாதத்தை வாங்கிய பின், "என்னுடைய

**(உண்மைச் சம்பவம் ஒன்றை தழுவி எழுதப்பட்டது.)**

பிள்ளையை மட்டுமல்ல எல்லாப் பிள்ளைகளையும் காப்பாற்றம்மா" என மனதில் இறைவனிடம் வேண்டிக் கொண்டு கோயில் பிரகாரத்தை விட்டு வெளியே வந்து வீதியில் இறங்கி வீடு நோக்கி நடக்கலானாள்.

"என்ன பார்வதி அக்கா ஒருநாளும் இல்லாமல் புதுசா புதன் கிழமை கோயிலுக்கு போட்டுவாறியள்." வீதியால் சென்ற புஸ்பத்தின் கேள்வியால் திரும்பிய பார்வதி கேட்டாள்,

"அது புஸ்பம் இன்று மூத்தவனின்ர பிறந்த நாள். அதுதான் அர்ச்சனை செய்துபோட்டு வாறன்" பதிலில் பெருமிதம் கலந்திருந்தது.


"அப்ப ரகுத்தம்பி இன்றைக்கு வீட்டை வருவாரோ"

"வாறனென்டுதான் பெடியளிட்டை சொல்லிவிட்டவன். அதுதான் அவசரமாகப் போறன். சமைக்க வேணும். போட்டு வரட்டே."

அவசரமாக விடைபெற்று நடந்தாள். நடையில் ஒரு சந்தோசம் தெரிந்தது.

கடல் நீரைக் கிழித்தவண்ணம் நான்கு படகுகளும் எதிரில் படகுகளை நோக்கி விரைந்தன. சுடுகலன்களைப் பற்றிப் பிடித்தபடி எதிரியை எதிர்பார்த்து ஒவ்வொருவரும் தயாராக நின்றனர். ஒவ்வொரு படகுச் சாரதியும் தாங்கள்தான் முதலில் எதிரியை எதிர் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் உச்ச வேகத்தில் படகைச் செலுத்தினர். ஒவ்வொரு அலைவரும் போதும் படகு உயரே எழுந்தன. பின் தாழ்ந்தன.

படகின் நடுவில் வோக்கியுடன் நின்ற நிமல் எதிரி இலக்குகளை நோக்கிய வண்ணம் மற்ற படகுத் தலைவர்களுக்கு கட்டளைகளைப் பிறப்பித்தான். பெரிய அலை ஒன்று வந்துபோனதால் படகு மேலெழுந்து பதிந்தது. கடல் நீர் படகினுள் அள்ளிக் கொட்டியது. ஒரு கையால் வோக்கியைப் பிடித்தவடி மற்றக் கையால் முகத்திலடித்த நீரைத் துடைத்துவிட்டு மீண்டும் கட்டளைகளைப் பிறப்பித்தான்.



"குகன் குகன் முன்னாலே போய் மறிக்கவும்"

"நிமல் நீங்கள் சொன்னபடியே செய்கிறேன். கிட்ட போய் விட்டேன்."

"மெயின் மெயின்!! நிமல் கதைக்கிறேன். சண்டையைத் தொடங்கிவிட்டோம்.

கரைக்கும் நிலைமை அறிவிக்கப் பட்டது.

கடல் அன்னையின் முதுகின் மேல் ஒரு பிரளயம் உருவாகியது.

"ரகுவிற்கு மீன் கறிதான் விருப்பம். கோயிலுக்கு போய் வந்தனான். என்றாலும் அவனுக்காக மீன் கறி சமைப்பம். அதில குற்றமில்லை. நீங்க போய் நல்ல மீன் வாங்கி வாங்கோ". கணவனிடம் கூறிவிட்டு சமையலுக்குரிய மற்ற வேலைகளைக் கவனித்தால் பார்வதி. வீதியில் வாகனச் சத்தம் கேட்ட போதெல்லாம் ஓடோடிப் போய் வாசலைப் பார்த்தாள். படலை காற்றிற்குத் திறந்து மூடிய போது ரகு வருவதாக எண்ணி எட்டிப் பார்த்தாள். மீண்டும் படலை திறந்து மூடும் ஓசை கேட்டது. ஓடிப் போய் வாசலைப் பார்த்தாள். கறுப்பன் நாய் வாலை ஆட்டிக் கொண்டு வந்தது.

"இந்தக் கதவை பூட்டிவிட வேணும். யாரும் வந்தால் தட்டுவினம். அப்ப திறக்கலாம். சீச்சி! பிறகு ரகு வந்தாலும் தட்டிக் கொண்டு நிற்பான். திறந்தே இருக்கட்டும். கதவு தெரியக் கூடியமாதிரி நான் இருந்தால் யார் வந்தாலும் தெரியும்."

மனதில் ஆவலை அடக்க முடியாமல் தேங்காயையும் துருவு பலகையையும் எடுத்துவந்து வாசல் தெரியக் கூடியமாதிரி இருந்து கொண்டு தேங்காய் துருவத் தொடங்கினாள்.

கடலில் சில மணிநேரம் இடைவிடாத சத்தங்கள் கேட்டன. தூண்டில் போட்டுக் கொண்டிருந்த கட்டுமரங்கள் கரையில் ஏற்றப்பட்டன. வளையை விட்டு வெளியே வந்த நண்டுகள் வளைக்குள் ஓடி ஒழித்தன. அலைகள் மட்டும் தொடர்ந்து கரையை முத்தமிட்டன.

தூரத்தே படகுகள் வருவது புள்ளியாகத் தெரிந்தது. கடலின் அலைகளைக் கிழித்துக் கொண்டு நுரை கக்கிய வண்ணம் படகுகள் வந்து கொண்டிருந்தன.

"நிமல்! மெயின் பேசுகிறேன். உங்கட நிலைமை என்னமாதிரி" கரையில் இருந்து கேள்வி பறந்தது.

"மெயின்! நிமல் அண்ணைக்கு சின்னப் பிரச்சினை. மற்றும்படி எங்கட பக்கம் பிரச்சினை இல்லை. அவனின் டோறா ஒன்று தாண்டுவிட்டது."

கரையில் பல கடற்புலிகள் இடுப்பளவு தண்ணீரில் வரும் படகுகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

அம்மா! அம்மா!! அம்மோய்!!!

"தம்பி வந்துவிட்டான். ரகு வந்துவிட்டான்"

"பார்வதி என்ன கனவு கண்டு புலம்புறியோ?" கணவனின் கேள்வியால் திடுக்கிட்டு எழுந்தாள்.

"அது வந்தம்மா....." வந்த இரண்டு போராளிகளில் ஒருவர் திக்கித் திக்கி சொன்னார். "இன்று மதியம் நடந்த கடல் சண்டையிலே நிமல் அண்ணை வீரச் சாவடைந்துவிட்டார்."

"ரகுகூ....." என்று கத்தியபடி அப்படியே சரிந்து விழுந்தவளை போராளி ஒருவர் தாங்கிப் பிடித்தார். ★

www.tamilarangam.net



# தமிழீழ மக்களின் ஊக்க சக்தியாக வாழ்ந்த பேராசான் துணைவேந்தர் துரைராசா

## பேராசான் துரைராசா அவர்களின் நான்காவது ஆண்டு நினைவாக.....

**போ**ராட்டத்திற்கு, கல்வி கேள்வியில் உயர்ந்தோர் எவ்வாறு பங்களிக்கலாம் என்பதற்கு வரலாற்று உதாரணமாகத் திகழ்ந்தவர்

*"மனநலம் நன்குடையராயினும்*
*சான்றோர்க்கு இனநலம்*
*ஏமாப்புடைத்து"*

என்பது தமிழ்ப் பேராசான் வள்ளுவர் திருவாக்கு. அதாவது உயர்ந்த மனமுடைய அறிஞர்க்கு தம் இனத்தினுடைய நன்மைகளைப் பேணுவதே பெருஞ்சிறப்பைத் தேடிக்கொடுக்கும் என்கிறார் வள்ளுவர். வள்ளுவர் வாய்மொழியின் வரலாற்றுப் புருடராக வாழ்ந்தவர் எங்கள் தமிழீழப் பேராசான் துணை வேந்தர் துரைராசா.

பட்டங்கள் பதவிகளைத் தேடியோடும் உலகில், பட்டங்கள் பதவிகளை அனுபவித்த – அனுபவிக்க கூடிய ஒரு மனிதன் தன் தேச நேசத்தால் விடுதலைத் தாகத்தால் யுத்த பூமியாக சிங்கள சிறிலங்காவால் மாற்றப்பட்டு விட்ட தன் மண்ணின் பல்கலைக் கழகத்தின் – யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் துணை வேந்தர் பொறுப்பை 1988 இல் தேடி ஏற்றுக் கொண்டார். இதை தேவாரத் தமிழில் கூறுவதானால் பேராசான் துரைராசர் பெருமை சொல்லவும் பெரிதே. பேராசான் துரைராசா அவர்களினால் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்ட **Simple Sheer Apparatus** என்ற பொறியும் விதியும் கட்டிடப் பொறியியலிலும் மண் பொறிமுறையிலும் உலகெல்லாம் செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருந்த காலகட்டத்தில் பேராசான் துரைராசா அதன் மூலம் பெறக் கூடிய அன்னிய தேச பல்கலைக்கழக பெரும் பதவிகளை எல்லாம் பொருட்படுத்தாது தன் தேசத்தின் – தமிழீழத் தாயகத்தின் – பல்கலைக் கழக கல்விக்கு சிறிலங்கா ஏற்படுத்திய ஈன இரக்கமற்ற கல்வி ஒதுக்கல்கள் பாகுபாடுகளுக்கு மத்தியில் தமிழீழக் கல்வி உயர்வுக்காய் தமிழீழ மாணவ மணிகளின் அறிவு வளர்ச்சிக்காய் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து கொண்டிருந்தார்.

### யாழ் பல்கலைக் கழகத்தின் இயக்க அச்சாக மாறிய பெருந்தகை

இந்த அர்ப்பணிப்பு, செயற்கரிய சாதனைகளை எத்தகைய இடர்பாடுகளுக்கு மத்திமிலும் சாதிக்க கூடிய தார்மீக பலத்தை மன உறுதியை அவருக்கு அளித்தது. அவர் பதவி ஏற்று இரண்டு மாதங்களுக்குள் அவரது அலுவலக யன்னல்கள் கதவுகள் உடைக்கப்பட்டன.

இவைகளால் அவரின் சேவை உறுதியைக் குலைக்க முடியவில்லை. அவர் துணைவேந்தர் பதவியை வெறும் அந்தஸ்து ஆசனமாக கருதவில்லை. சமுதாய பணிக்கான தளமாக ஏற்றுக் கொண்டார். தேசப் பற்றாளரும் தேச விடுதலை நெஞ்சங்களும் இணைந்து புதியதோர் கல்வி புரட்சியைத் தோற்றுவித்தன. நாட்டுக்கு ஏற்ற கல்வி இருக்கும் சூழலைப் பயன்படுத்தி தேச நிர்மாணத்தை கொண்டியக்கும் திறமை தமிழீழக் கல்வியின் தனிச் சிறப்பாக பளிச்சிட்டது. தமிழர் கல்வியை அழித்து விட்டதாக – தமிழர் வாழ்வின் சுழற்சிகளின் அச்சுக்களை நொறுக்கி விட்டதாக இறுமாந்திருந்த சிங்கள சிறிலங்கா எந்தச் சூழலிலும் வீழ்த்த வீழ்த்த எழுந்து நிற்கும் தமிழரின் கல்வித்திறன் கண்டு செய்வதறியாது திகைத்தது. சிறிலங்காவால் நிறுத்தப்பட இருந்த யாழ் பல்கலைக் கழகத்தின் அச்சாக பேராசான் துரைராசா தன்னைப் பொருத்தி யாழ் பல்கலைக் கழகம் தொடர்ந்து இயங்கச் செய்தார்.


உலகெல்லாம் புகழ் கொண்ட பெரும் பொறியியல் பேராசிரியர் அடக்கத்தின் அமைதியின் அன்பின் உருவாய் யாழ். மண்ணிலே பணிசெய்த பாங்கு சங்கத் தமிழ் இலக்கியங்கள் சுட்டும் ஆன்றவிந்த சான்றோர் என்பதன் அர்த்தத்தை உலகிற்கு மீண்டும் விளக்கியது. மண்ணோடு இணைந்த நெஞ்சம். மக்களோடு ஒன்றான வாழ்வு. அறிவில் நிறைந்த உள்ளம். ஆற்றல் பெருக்கெடுத்தோடும் பணிகள். இவைகளின் உயிர் உருவாக பேராசான் துரைராசாவை கண்டு போற்றினர் தமிழீழ மக்கள்.

### தளராத உறுதிப்பாட்டிற்கு ஒரு உன்னத உதாரணம்

" எத்தனையோ அவலங்கள் துன்பங்கள் மத்தியிலும் எதற்கும் அஞ்சாத துணிவுடன் இந்த மண்ணைப்பற்றி நிற்கும் எமது மக்களுக்கு பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு ஊக்க சக்தியாக விளங்கினார். தளர்ந்து போகாத உறுதிப்பாட்டிற்கு ஒரு உன்னத உதாரணமாக விளங்கினார்" என பேராசிரியர் துரைராசாவின் பிரிவுபசார வைபவத்தில் உரையாற்றத் தொடங்கிய எங்கள் தமிழீழத் தேசத் தலைவர் பிரபாகரன் அவர்கள் பின்வருமாறு கூறினார் :–"

சான்றோரைப் போற்றுவதும், கற்றோரைக் கௌரவிப்பதும் தமிழர்களாகிய எமது மரபு. எமது சீரிய பண்பாடு. இந்தப் பண்புக்கமைய பேராசிரியர் துரைராசா அவர்களைப் பாராட்டி கௌரவிப்பதற்காக நாம் இங்கு கூடியிருக்கின்றோம். பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு தலை சிறந்த கல்விமான். உலகப் புகழீட்டிய அறிஞர். ஆறு ஆண்டுகளாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராகப் பதவியிலிருந்து அவர் எமது மண்ணுக்கு ஆற்றிய சேவை மகத்தானது. அதற்காக ஈழத் தமிழுலகம் அவருக்கு என்றும் கடமைப்பட்டிருக்கும். பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு தேசப்பற்றாளர். அவர் இந்த மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்தார். அவரது வாழ்க்கை இந்த மண்ணோடு பிணைந்தது. மக்களோடு இணைந்தது. அவர் இந்த மண்ணினதும் மக்களினதும் போராட்ட வாழ்வோடு ஒன்றி ணைந்து நின்றார். போராட்ட வாழ்வின் பளுக்களைச் சுமந்து கொண்டார். போராடும் மக்களின் துன்பங்களைப் பகிர்ந்து கொண்டார். எமது இனத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கல்வி ஆதாரமானது. எமது – சமுகத்தின் முன்னேற்றத்திற்கு அடித்தளமானது. நீண்ட காலமாகவே எமது கல்வி வாழ்வை சிதைத்து விட எதிரியானவன் முனைந்து வருகின்றான். இதனால் தமிழரின் கல்வி பாரதுாரமான அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. சரிந்து கொண்டிருக்கும் எமது கல்வித்துறையை நிமிர்த்திவிட வேண்டும் என்ற இலக்கில் பேராசிரியர் துரைராசா அவர்கள் அரும்பாடுபட்டார். எத்தனையோ இடையூறுகளுக்கு மத்தியில் துணிந்து செயலாற்றினார். எதிரியின் போர் அழுத்தங்களினாலும் அனர்ந்தங்களாலும் யாழ்ப்பாண உயர்கல்விப் பீடம் செயழிழந்து போகாத வண்ணம் அவர் ஆற்றிய அருந்தொண்டு மிகவும் பாராட்டுக்குரியது. இது அவரது தேசப்பற்றுக்கும் மக்கள் நேயத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டு. பேராசிரியர் துரைராசா ஒரு எளிமையான மனிதர். ஒரு இனிமையான மனிதர். எளிமையும் இனிமையும் நிறைந்த ஒரு நல்ல மனிதர். அறிவின் அதி உயர்ந்த பண்பாகப் பிறப்பது தான் எளிமை. தன்னலமும் தற் பெருமையும் அகன்ற நற் பண்பாக எளிமை தோன்றுகிறது. இந்த எளிமை ஒருவரை அழகான மனிதராக பண்பான மனிதராக ஆக்கிவிடுகிறது. இந்த வகையில் பேராசிரியர் துரைராசா ஒரு அழகான மனிதர். அவரிடம் உள்ள இந்த அகத்தின் அழகுதான் மக்களைக் கவரும் மாண்பாக விளங்குகிறது" என்றார்.

தேசத்தலைவரின் கூற்று பேராசான் துரைராசாவின் தேசப்பணி குறித்த வரலாற்றுப் பதிவாக உள்ளது.



### பேராசான் துரைராசா அவர்களின் விருப்பு

" ஒவ்வொருவரும் தமது இனத்தின் உரிமைகள் பறிபோகும் போது அதற்காக குரல் கொடுக்க வேண்டும். அவ்வாறு குரல் கொடுப்பதற்கு யாருக்கும் பயப்படத் தேவையில்லை. இனத்திற்கான உரிமையைக் கேட்பது இனவெறியாக மாட்டாது. அதனைக் கேட்பதில் எவ்வித தவறும் இல்லை" என்பதே பேராசிரியர் தனது வாய்மொழியாக தமிழ் மக்களுக்கு விட்டுச் சென்றுள்ள செய்தி. இதனை மனதிருத்தி முன்னெடுக்க வேண்டியது எல்லா நிலைகளிலும் உள்ள ஒவ்வொரு தமிழீழ மக்களதும் கடமையாக உள்ளது.

பேராசான் துரைராசா அவர்களின் சொற்களை சிந்தனைகளை நனவாக்க உழைப்பதே அவருக்கு தமிழீழ மக்கள் செய்யக்கூடிய உண்மையான அஞ்சலியாகும். ★

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபத்தியிரண்டு

(தொடர்ச்சி)

ஆயினும் திடீரென அவர்களுக்கு ஒரு அதிர்ஸ்டம் அடித்தது. "மீட்பாளர் குழு" ஒரு குதிரையை எங்கோ பிடித்து வந்தனர். அது எலும்பும் தோலுமான ஒரு கிழட்டுக் குதிரை. அவர்களுடைய மதச்சட்டங்கள் உணவாகக் கொள்வதை தடுத்திருந்தாலும் அதன் இறைச்சி அவ்வேளையில் மிக ருசிகரமாயிருந்தது.

ருத்துக்கும் 19 வயதாயிற்று. அந்த முன்பனிக்காலத்தில் அவள் ஜானை மணந்துகொண்டபோது அவள் அழகாயிருப்பதற்கு தகுதியில்லாமல் மிகவும் மெலிந்து போயிருந்தாள். அவள் மற்ற நாலு லண்டவ்களுடனும் அவனது 3 குடும்ப அங்கத்தவரோடும் பகிர்ந்து கொண்ட அந்த ஒற்றை அறையிலேயே தங்கள் தேன்நிலவைக் கழித்தனர். ஆயினும் அந்த இளஞ்சோடி எங்கோ எப்படியோ தனிமையான இடமொன்றை கண்டுபிடித்திருக்க வேண்டும். ஏனெனில் வசந்தருது காலத்தின் போது ருத் தாய்மை அடைந்திருந்தாள்.

மீட்பாளர் குழுவின் தலைவன் என்ற கோதாவில் மண்டேக்கின் முக்கிய கடமைகளில் ஒன்றாக வெளியுலகோடு தொடர்பு கொள்வது இருந்தது. போலந்தின் நீல்உடைக் காவலர்களையும், லித்துவானியன்களையும் லஞ்சம் கொடுத்து வாங்கி விடலாம். ஆனால் பணத்தை முக்கியமான தேவைகட்கு மட்டும் ஒதுக்கி வைத்திருக்க வேண்டுமென மண்டெக் நினைத்தான். அவன் தடுப்புச் சுவர்களுக்கூடாக கழிவுநீர் குழாய்களுக்கூடாக இரகசிய வழிகளை ஏற்படுத்த முயன்றான். வார்சோவுக்குள் செல்வது மிகவும் ஆபத்தானது. ஏனெனில், போலந்தின் காடையர் கூட்டங்கள் தப்பி வரும் யூதர்களைப் பிடித்துக் கப்பம் கறக்கவும் பிடித்துக் கொடுத்து பரிசுப்பணத்தைப் பெறவும் கண்காணிப்புடன் தெருக்களில் எப்போதும் இருந்து வந்தனர்.

சுவருக்கு வெளியே சென்ற "மீட்பாளர் குழு" வின் 5 அங்கத்தவர்களை ஏற்கனவே இழந்திருந்தார்கள். கடைசியாக காடையர்களால் பிடிக்கப்பட்டு கெஸ்ரப்போவினால் தூக்கிலிடப்பட்டிருந்தவன் ருத் இன் கணவனான ஜானாவும்.

தப்பிப் பிழைக்கும் கலையில் டெவ் மிகவும் தேர்ந்திருந்தான். அவன் மண்டெக்கிடம் போய், கழிவு வாய்க்கால்களூடாகச் செய்திகளை எடுத்துச் செல்லும் வேலைக்குத் தன்னை நியமிக்கும்படி விண்ணப்பித்தான். மண்டெக் முதலில் மறுத்து வந்தாலும், டொவ் விடாப்பிடியாக நின்றான். அவனுடைய சிவந்த கூந்தலும், நீலநிற விழிகளும், யூதன் என்று சொல்ல முடியாத அளவிற்குச் செய்திருந்தன. அவனுடைய வயதாலும் அவன் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவனாக இருந்தான். டொவ் இந்த வேலையைச் செய்வதற்கு வேண்டிய துணிவும், திறமையும் கொண்டிருப்பதை மண்டெக் அறிந்திருந்தாலும், தன் ஒரே இளையவனை அவ் வேலையைச் செய்ய அனுமதிக்க அவன் மனம் இடம் தரவில்லை. ஆயினும் தன் ஆறாவது, ஏழாவது செய்திகொண்டு செல்பவர்களைச் சில நாட்கள் இடைவெளியில் இழந்து போக நேர்ந்தபோது, டொவ்வை அம்முயற்சியில் ஈடுபடுத்த மண்டெக் முடிவு செய்தான். தாங்கள் எல்லோருமே நிதமும் சாவுடன் விளையாடிக்கொண்டிருப்பதால் இப்படி முடிவெடுத்தது சரி என மண்டெக் நியாயப் படுத்திக்கொண்டான். சூழ்நிலைகளைப் புரிந்து கொண்ட லியாவும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

டொவ், சேரியிலேயே திறமையான செய்திகொண்டு செல்பவன்தான் தான் என நீரூபித்தான். அவன் 'சுவருக்குக் கீழ்' ஆன பல வழிகளைக் கண்டறிந்து கொண்டான். வழுக்கலான துர்நாற்றமும், அழுகிய மணக்கும் பொருட்களைக்காண்ட வார்சோவின் கீழ் ஓடும் கழிவுநீர் வாய்க்கால்கள் அவனுக்குச் சொந்த வீடுபோல் பரிச்சயமாயின. ஒவ்வொரு வாரமும், இவ் இருளினூடே தோள் மட்டத்திற்கு இருந்த அசுத்தத்தின் ஊடே சென்று வருவான். சுவரின் கீழால் சென்றதும், கப்றொஸ்கா 99இல் இருந்த ஒரு வீட்டில் தனக்கு வன்டா என்று மட்டும் அறிமுகமாகி இருந்த பெண்ணொருத்தியிடம் செல்வான். உணவெதுவும் அருந்திய பின் நிலத்தடிக் கழிவு நீர் வாய்க்காலுக்கு, கைத்துப்பாக்கிகள், ரவைகள், பணம், வானொலி உபகரணங்கள், உதிரிப்பாகங்கள், வேறு சேரிகளில் இருந்து வரும் செய்திகள், விடுதலைப் போராளிகளிடம் இருந்து வரும் செய்திகள் போன்றவற்றைத் தன்னிடம் எடுத்துச் செல்வான்.



தனது வாராந்த பயணங்களை மேற்கொள்ளாத நாட்களில், மண்டெக்கும், றெபேக்காவும் தங்களின் நேரத்தில் பெரும்பாகத்தைச் செலவிடும் மீட்பாளர்கள் குழு தலைமையகத்தில் செலவிடவே டொவ் விரும்பினான். றெபேக்காவின் வேலை போலிப் பிரயாணச் சீட்டுக்களையும், பாஸ் போட்டுக்களையும் தயாரிப்பதற்காக இருந்தது. டொவ் அவளை அவதானித்துக் கொண்டிருப்பதை மிகவும் விரும்பினான். பின்பு அவளோடு இணைந்து வேலை செய்தான். வெகு சீக்கிரமே, பிரதி பண்ணவும் ஒரே மாதிரியான இருபிரதிகள் தயாரிக்கவும் டொவ்விற்கிருந்த குறிப்பிடத்தக்க திறமை வெளியாயிற்று. அவனுடைய கண்கள் கூர்மையானதாகவும், கைகள் ஸ்திரமானதாகவும் இருந்ததால் மீட்பாளர் குழுவின் அதிசிறந்த போலி ஆவணத் தயாரிப்பாளனாக சீக்கிரமே உருவெடுத்தான்.

1942 இளவேனிற்காலம்.

யூதர்கள் பிரச்சினைக்கான இறுதித் தீர்வைச் செயல்படுத்தும் முகமாக முக்கிய ஒரு நடவடிக்கை எடுத்தார்கள். பெரும் தொகையில் யூதர்களைக் கொல்வதற்கான பல முகாம்கள் நிறுவினார்கள். வார்சோவின் யூதர்களைக் கையாள மக்கள் பார்வைக்கு அகப்படாத 33 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட ஒரு முகாம் ட்ரெப்லிங்கா என்னுமிடத்தில் அமைக்கப்பட்டது. இரு பிரதான கட்டிடங்கள் பதின்மூன்று விசவாயுக் கூடங்களைக் கொண்டிருந்தன. இங்கு யேர்மன் ஆளணிக்கும் வேலையாட்களுக்குமான வதிவிடங்களும், பிணங்களை எரிக்கப் பரந்த வெளிகளும் காணப்பட்டன. முதலில் நிறுவப்பட்ட பல முகாம்களில் ஒன்றான ட்ரெப்லிங்கா தொடர்ந்து நிறுவப்பட்ட திறமையாகச் செயற்பட்ட பல முகாம்களுக்கு முன்னோடியாயிற்று.

ஆடி 1942.

ஆடிமாதம் ஒரு துக்க தினத்தை எல்லா யூதருக்கும் கொண்டு வரும் வார்சே யூதசேரியிலும், போலந்திலிருந்த மற்றைய சேரிகளிலிருந்த யூதர்களும் மிக ஆழமான துக்கதினமொன்றை அனுட்டித்தனர். அதுதான் ஜெருசலேமின் தேவாலையங்கள் ரோமர்களாலும், பபிலோனியர்களாலும் அழிக்கப்பட்ட தினத்தை நினைவுகூரும் வருடாந்த யூத விடுமுறை தினமான ரிஸ்ஸா பியாப் ஆகும். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு, ரோம ஆக்கிரமிப்பாளரிடம் ஜெருசலேம் வீழ்ச்சியடைந்ததானது, யூதர்கள் ஒரு நாடாக விளங்கியதன் முடிவைச் சமிக்ஞை செய்தது. அதிலிருந்து யூதர்கள் உலகின் பல மூலைகட்கும் சிதறடிக்கப்பட்டார்கள். அந்த நாள் தொடக்கம் அவர்கள் டயஸ்பொறா ஆகினர்.

1942இன் ரிஸ்ஸா பியாப், யூதர்கள் பிரச்சனைக்கான இறுதித் தீர்வு நடவடிக்கைகள் இரண்டும் ஒரே

**லியோன் யூரிஸ்**

சமயத்தில் நிகழ்ந்தன.

வார்சோவின் யூதர்கள் தங்கள் கடந்தகால, நிகழ்காலத் துன்பங்களுக்காகத் துக்கித்துக் கொண்டிருந்த அதே வேளையில், யேர்மன் ரோந்துத் துருப்புகள் சேரியுள் விரைந்து வந்து யூதகவுன்சில் கட்டிடத்திற்கெதிரே நின்றனர். வெளித்தோற்றத்துக்கு யேர்மனியர்கள் தங்கள் கட்டாய வேலை அணிக்கு ஆட்களைத் திரட்ட மேற்கொள்ளும் இன்னொரு சுற்றி வளைப்புப் போல் இது தோன்றியது. ஆனால், இம்முறை ஏதோ அமானுஸ்சியமான ஒன்று நிகழ்வது உணரப்பட்டது.

**தொடரும்...**

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள தலைப்பிற்குப் பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் உங்கள் சிந்தனையில் எழும் கருத்துக்களை கவிதை வடிவில் தாருங்கள். உங்கள் ஆக்கங்களை **17- 07 - 1998** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## எல்லோரும் ஒன்றாக...

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

***அன்புச் அன்புச் அன்புச் சகோதரமே!***

*"அகதிக்கு ஆகாயம் துணைவு" என்பது தமிழ் மக்களிடை வழக்கிலுள்ள பிரபல்யமான முதுமொழிகளில் ஒன்று. நாமும் சிறீலங்கா அரச பயங்கரவாதத்தினால் அகதிகளாகிய நிலையில் வெளிநாடுகளுக்கு அகதிகளாக ஓடிவருவதற்கு இந்த ஆகாயம் தான் துணையாக இருந்தது. அன்றும் -இன்றும் சிறீலங்காவின் ஆக்கிரமிப்பு படைகளினால் விரட்டி அடிக்கப்பட்டு -தமது சொந்த வீடு வாசல்களை விட்டு வெளியேறி -தாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த தம் சொந்த மண்ணிலேயே அகதிகளாக வாழும் -பல இலட்சம் நம் உடன் பிறப்புகளுக்கும் தமிழீழ ஆகாயமே கூரையாகி துணைநிற்பது நாம் அறிந்த ஒன்று. சிறீலங்கா ஆக்கிரமிப்பு அரசாங்கம் இவ்வாறு "அகதிக்கு ஆகாயம் துணை" என்ற முதுமொழியை எமது வாழ்வின் அனுபவமாக்கியதினால் நாம் சொந்தங்களைப் பிரிந்து உலகெல்லாம் அகதிகளாய் வாழும் அவலநிலையை அனுபவிக்கின்றோம்.*

*நாம் இவ்வாறு அகதிகளாக்கப்பட்டமைக்கு காரணம். எமது சொந்த மண்ணை எமதாக வைத்திருப்பதற்கான சக்தியை - வலிமையை உருவாக்கத் தவறியமையே. ஆனால் இன்று. அந்த நிலை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையினால் மாற்றப்பட்டுள்ளது. தமிழனை அகதியாக்கப் புறப்பட்ட சிங்கள சேனை- பலத்த ஆளணிச் சேதங்களையும் பல கோடி ஆயுத தளபாட இழப்புக்களையும் சந்தித்து தவித்துக் கொண்டு நிற்பது இன்றைய யதார்த்தம். தமிழீழத்தின் ஒரு சில பகுதிகளில் சிங்கள இராணுவம் ஆக்கிரமிக்க- அதை விட பல மடங்கு பிரதேசங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்படுவது தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கான காரணியாக உள்ளது.*

*இவ்வாறு- சிங்களத்தின் எந்த ஆக்கிரமிப்பும் அது எதிர்பார்த்த பலனை அடையாமல் போவதற்கு மூலகாரணம் தலைவர் பிரபாகரனின் ஆற்றல்மிகு தலைமையும் அந்தத் தலைவனின் செயற் திட்டங்களுக்கு பேருதவி புரியும் தமிழீழ மக்களும் என்பதை இன்றைய சிறீலங்காவின் நரித்தந்திரத் தலைவி இனங்கண்டு சண்டைக்கான அணுகு முறைகளில் புதிய வழிகளைப் புகுத்தினார். நயமான முறையில் பேச்சுவார்த்தைகள் என்ற கோசத்தினால் தமிழீழ மக்களையும் பிரிக்க முனைந்தார். இது கைகூடாது என்று கண்டதும் சமாதானத்திற்கான யுத்தம் என்ற கோசத்துடன் சண்டையை ஆரம்பித்து தமிழர் தாயகத்தில் மக்களையும் உட்கட்டுமானங்களையும் உருக்குலைத்து இனஅழிப்பு மூலம் தமிழர் மனஉறுதியை- போராட்ட வலிமையை- நாசமாக்கலாம் என வேகமாகச் செயற்பட்டு வருகின்றார்.*

*சமீபத்தில் வன்னிப்பகுதிக்கும் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதிகளுக்கும் சென்று தமிழ் மக்களைச் சந்தித்து தமிழ்நாட்டுக்குத் திரும்பிய தெற்காசியாவுக்கான யேசுசபையின் அகதிகள் சேவை இயக்குனர் அமலராஜ் அடிகள் இப்பகுதியில் வாழும் 250.000 தமிழ் மக்களும் திட்டமிட்ட வகையில் சிறீலங்கா அரசாங்கத்தால் தண்டிக்கப்பட்டு வருகின்றனர் எனச் சுட்டிக்காட்டி உள்ளார். தனது மக்கள் எனக் கூறிக்கொண்டு அவர்களை அரசாங்கம் தண்டிக்கிறது என்று உலகுக்கு இடித்துரைத்துள்ளார். இனியாவது உலகின் மனச்சாட்சி - சிறீலங்கா தமிழ் மக்களின் அந்நிய அரசாக செயற்படுகிறது என்ற உண்மையை மனதிருத்தி தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை அங்கீகரித்து சிறீலங்காவின் இனஅழிப்பு நடவடிக்கைகளுக்கு உதவுவதை நிறுத்திக் கொள்ளட்டும். அதேவேளை- அமலராஜ் அடிகள் தமிழ் மக்களின் விடுதலை மீதான உறுதிப்பாட்டுத் தன்மையையும் வெளிப்படுத்தியுள்ளார். வன்னி மக்கள் நம்பிக்கை இழக்காதவர்களாய் சுதந்திரக் காற்றை சுவாசிக்க நாம் கொடுக்கும் விலை இதுவென்றால் இதற்கு மேலும் துன்பப்பட தயாராக உள்ளோம் என உறுதியுடன் சூளுரைத்துள்ளமையையும் சுட்டிக்காட்டியுள்ளார். ஆயினும்- இந்த மக்களை மேலும் மேலும் வறுமை நிலைக்குத் தள்ளி அவர்களை உருக்குலைக்க முயலும் சிறீலங்காவின் திட்டமிட்ட இனஅழிப்புக்கு எதிராக உலக நாடுகளில் வாழும் தமிழர்கள் எல்லாம் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டிய உடன் தேவையை இறுக்கமாக வலியுறுத்தியுள்ளார். தமிழர்கள் அனைவரும் ஆபத்தான சூழலை மனதில் கொண்டு உடனடியாக இப்பிரச்சினையை தமது **குடும்பத் தேவையாக உணர்ந்து கைகொடுக்க வேண்டுமென்று கேட்டுள்ளார்.***

*ஆம்! சிறீலங்கா தமிழர்களை இராணுவ இன்வதை செய்வதன் மூலமே தமிழர்களின் நம்பிக்கைகளை- கருத்துக்களை அழித்தொழித்து- அவர்களின் உயிர்வாழ்தலுக்கான விடுதலைப் போராட்டத்தை நசுக்கி- அவர்கள் மேல் சிங்கள பெளத்த மேலாண்மையை அரசியல் தீர்வு என்ற போர்வையில் திணித்து- அடிமை சாசனம் எழுத உறுதி பூண்டு நிற்கிறது. இதற்காக- சிறீலங்காவால் எடுக்கப்பட்ட இராணுவத்திற்கான ஆட்திரட்டல் முயற்சிகள் சிங்கள மக்கள் மத்தியில் சாத்தியப்படாத நிலையில் கட்டாய ஆட்திரட்டலுக்கான முயற்சிகளில் அதன் கவனம் திரும்பியுள்ளது. கட்டாய ஆட்திரட்டல் என்பது நாடு ஒன்று இன்னொரு நாட்டினால் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் சூழ்நிலை தோன்றும் பொழுது மேற்கொள்ளப்படும் முயற்சி. ஆனால் -சிங்கள நாட்டினை ஆக்கிரமிக்கும் நோக்கு தமிழீழ மக்களுக்கு என்றுமில்லை. தமது பகுதிகளை ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களை அகலுங்கள் அல்லது அகற்றுவோம் என்பதே தமிழீழ மக்களின் செய்தியாக உள்ளது. எங்களை உங்களுடன் காலனித்துவம் கட்டாய இணைப்பு செய்தது. அதற்குள்ளும் எங்களது அரசியல் உரிமைகளுடன் உங்களுடன் இணைந்து வாழ ஏதாவது வழி உண்டா என்றே காலனித்துவம் விலகிய பின் வந்த முதல் கால் நூற்றாண்டும் எல்லா ஜனநாயக வழிகளிலும் முயன்றோம். எங்கள் அகிம்சை வழிகள் எல்லாம் உங்களால் எங்களை அடிமையாக்குவதற்கான ஊடகங்களாக்கப்பட்டன. நாங்கள் உங்களுடன் ஜனநாயக ஒற்றை ஆட்சியில் பங்குபற்றுவதற்காக பிரித்தானிய காலனித்துவம் விதித்த நிபந்தனைகளை எல்லாம் மீறி எங்களை எங்கள் தாயகத்திலேயே நாடற்றவர்கள் ஆக்கினீர்கள். அப்பொழுதும் ஜனநாயக வழிகளிலேயே எமது போராட்டத்தினைத் தொடர்ந்தோம். நீங்கள்தான் ஆயுத படை பலம் கொண்டு இன அழிப்புக்களை -ஆக்கிரமிப்புக்களைத் தொடர்ந்தீர்கள். அதன் பலன் இன்றைய நிலை. ஆனாலும்- இன்று எங்கள் தாயகத்தில் பெரும் பகுதி எங்கள் இறைமையில் தான் குளிக்கின்றது. நீங்கள் ஆக்கிரமிப்பாளராகி நிற்கின்றீர்கள். படைகளை விலக்குங்கள். எங்கள் தாயக உரிமையை ஏற்றுக்கொண்டு எங்கள் தலைவனுடன் பேசுங்கள். பிரச்சினை நிச்சயமாகத் தீர்வு பெறும் என்பதே தமிழீழ மக்கள் சிறீலங்கா அரசாங்கத்திற்கு விடுக்கும் அழைப்பு. இந்த அழைப்பை ஏற்க மறுத்து- எதிர்ப்பதற்கு தமிழர் தாயகத்தை அழிப்பதற்கு- கட்டாய ஆட்திரட்டலில் சிறீலங்கா பகிரங்க முயற்சிகளை எடுத்துவருகிறது. இது போர் தொடர் கதையாக நீண்டு செல்லப் போகிறது என்பதை தெட்டத் தெளிவாக்கி நிற்கிறது.*

*இந்நிலையில்- தமிழ் மக்கள் மீதான படைகளின் கொடூரச் செயல்கள் அதிகரிக்கப் போவது உறுதி. கடந்த வருடம் ஆவணி மாதத்தில் யாழ்ப்பாணத்திற்குச் சென்று காணாமல் போனவர்களின் உற்றாரைக் கண்டு பேசிய ஐக்கிய நாடுகள் சபையின் காணாமல் போனவர் தொடர்பாக ஆராயும் விசேட பிரதிநிதியே சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில் வடக்கில் காணாமல் போனோர் தொடர்பான சம்பவங்களில் சிறீலங்காப் படையினரே பொறுப்பாக உள்ளனர் என உலகுக்கு எடுத்துக் காட்டி உள்ளார். காணாமல் போகும் சம்பவங்களில் தொடர்புடைய குற்றவாளிகள் கைது செய்யப்படவோ அல்லது நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்படவோ இல்லை. இதுவே காணாமல் போகும் சம்பவங்கள் அதிகரிக்க காரணம் எனக் கூறியும் உள்ளார். அவரின் அறிக்கை பாதுகாப்பற்ற நிலையில் எம்மக்கள் துடிப்பதை உறுதிபடுத்தி உள்ளது. இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலேயே எங்கள் கண்மணிகளின் வாழ்வு தங்கியுள்ளது என்பது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.*

*தமிழீழ விடுதலைப் புலிகளின் கடல் பாதுகாப்பு மெச்சத் தக்க நிலையினை அடைந்துள்ளது. தரைப்பாதுகாப்பு சிங்களப்படைகளுக்குச் சிம்ம சொப்பனமாக விளங்குகிறது. ஆகாய வழியாகத் தான் எதிரி எம் மக்கள் தலைகளில் குண்டுகளைக் கொட்டினான் -கொட்டுகிறான். ஆனால் இன்று தமிழீழ வானிலும் சிங்கள குண்டு வீச்சு விமானங்களும் உலங்கு வானூர்திகளும் அஞ்சி அஞ்சித்தான் பறக்கின்றன. இந்த அச்சம் தடையாக மாற்றப்பட்டாலே தமிழீழ மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் காலம் விரைவுபடும். ஆதலால் தான் "அகதிக்கு ஆகாயம் துணை" என்ற தமிழ் வழக்கு "ஆகாயத்துக்கு அகதிதுணை" என மாற்றமடைந்து நிற்கிறது. இதனை உணர்ந்து அகதிகளாக அகிலமெங்கும் வாழும் நாம் செயற்பட்டால் துடிக்கும் எங்கள் தமிழீழ மக்களின் அவலநிலை மாறும் காலம் வெகு தூரத்தில் இல்லை. எங்கள் உதவிகள் தமிழீழ ஆகாயத்தை நிறைக்கட்டும். சந்திரிகா அரசால் வானம் கூரையாக வாழ கட்டாயப் படுத்தப்பட்டுள்ள எம் மக்கள் அந்த வானமே புலம் பெயர் தமிழர்களால் தமக்கு தேவையானவைகளை தரும் ஊடகமாக மாற்றப்பட்டமை கண்டு மகிழும் காலத்தை உருவாக்குவோம்.*

*அன்பின் ஆசிரியர்*




**நா**ளைய சந்ததிக்கு நாம் நடத்தும் போராட்டம்
கோழைகளாய் வாழ்விழந்து கால்விலங்கில் மாள்வதற்கா
ஏழைகளாய்க் கையேந்தி உலகெல்லாம் அலைவதற்கா?
பாலைவனம் போல்அழிந்த பூமியையே பிரிவதற்கா?
வேளைகளில் உண்டுறங்கி வேதாந்தம் பேசுதற்கா?
ஆளைஆள் பொறிப்பதற்கா பேழைகளில் அடங்குதற்கா
வாழையடி வாழையென வாழ்ந்த நம்மினத்தின்
காளையெல்லாம் சுதந்திரமாய் ஈழத்தில் வாழ்வதற்கே!

**- கோமதி முருகப்பன் இங்கிலாந்து.**

**வா**கனங்கள் அல்ல
வங்கியில் இலட்சங்களும் அல்ல
வசதியான அகதிவாழ்வும் அல்ல
நாளைய சந்ததிக்குத் தேவை–
நாம் தலை நிமிர்ந்து வாழ ஒரு நாடு!
சுதந்திரமான தமிழீழ நாடு!
தமிழா அதை நீ இன்றே தேடு!

**- பூபதி யேர்மனி.**

**வே**ரூன்றி நாமிருந்த ஊரிழந்தோம்
பரம்பரையாய் வந்த புகழ்இழந்தோம்
நாதியற்று நடுவனத்தில் ஏதிலியாய் வாழுகின்றோம்
இதில் நாளைய சந்ததியின் இருப்பிற்கு ஏதுறுதி?
சொத்தும் வேண்டாம் சுகமும் வேண்டாம்–நம்
தாயக சுதந்திரத்தின் இறைமை வேண்டும்
தாய் மண்ணை நேசித்து நம் விழிதிறந்தால்...
நாளைய சந்ததிக்கு நிச்சயம் விடிவு உண்டு!

**- குப்பிழானூர் கே. காந்தரூபன் சுவிஸ்.**

## நாளைய சந்ததிக்கு...

**நா**மென்ன செய்தோம் நாளைய சந்ததிக்கு
வரலாற்று உண்மைகளை வரிகளிலே வடித்திடுவோம்
"ஈழத்தின்" தாகத்தை பாலோடு கலந்திடுவோம்
இன்றய சோகத்தை தணித்திடவே முயன்றிடுவோம்
இணையில்லாத் தலைவனின் வீரத்தைப் பாடிடுவோம்
எங்களுக்காய் உயிர்துறந்த பிஞ்சுகளைநினைத்திடுவோம்
கோழையென வாழாது கொடியவரை அழித்திடுவோம்
நாளை வரும் ஈழத்தை இன்றெண்ணி குதித்திடுவோம்.

**-திருமதி விஜயநாதன் யேர்மனி.**

**எ**ம்மவரின் மானம் காக்க
எமது மண்ணில் தலைநிமிர்ந்து வாழ
எமது இளைய சமுதாயம்சுதந்திரமாய் உலாவ
எமக்கொரு நாடு நிச்சயம் தேவை
எம்தேச விடுதலைக்காய் வீரமுடன் போராடும்
எம்மினிய தோழர்களுக்கு உடலாலும் உள்ளத்தாலும்
உரம் கொடுப்போம் –அதுபோதும் எங்கள்
விடியலை வென்றெடுக்க....

**- ஆன் கிறிஸ்ரின் பிரான்ஸ்.**

www.tamilarangam.net



# பனங்காம மண்ணை நெற்றியிலிட்டு வணங்காமண் போரிடும்

"தாமரைப் பூவினால் மாலைகட்டி – எங்கள்
தாயகப் பூமிக்குச் சாத்துங்கடி
பாமழையால் நிலம் பண்பட்டுப் போகவே
பாடியே கும்மிகள் கொட்டுங்கடி"
என்றான் ஒரு ஈழப்புலவன்.
"மட்டக்களப்புடன் யாழ்ப்பாணம் – வன்னி
மன்னார், திருமலை எம்தேசம்.
கொள்ளை அழகடி எங்கள் தமிழீழம்
கொட்டுங்கடி ஒரு வட்டக்கும்மி"
எல்லைவகுத்து எழிலுரைத்தான் ஒரு கவிஞன்.
பெற்றதாய் பெரியள்.
அவளே அனைத்துக்கும் ஆதிமூலம்
முலைசுரந்த அமுதூட்டிய முதல்வள் அவள்.
கருப்பைக்குள்ளிருந்து காலாலுதைத்தபோதும்
விருப்புற்றெம் பாதங்களுக்கு வெளியே முத்தமிட்டவள்
தாயே சிறந்தவளெனினும்,
தாயகம் குறைந்தவளல்லள்.
கால்தொட்ட நாள்முதல் உயிர்தொட்ட உறவெது?
அன்னைமண் மீதான உறவேதான்.
பிறந்தமண் உறவே சிறந்தது.
தான் உயிர்கொண்டுலவிய தாய்மண்மீது
உறவற்றுப் போகுமொருவன்
மனிதனே அல்ல.
மண்ணிழந்த பின்னும் வாழ்வோமென்பது
கண்ணிழந்த பின்பும் காண்போமென்பதற்குச் சமன்.
கறந்தமுலையும், பிறந்தபூமியும்
சுரந்தூறும் அமிர்தக் கேணிகள்.
ஊர்க்கிணற்றில் குளித்து,
ஊர்ப்புறத்தில் உலவி,
ஊர்மடியில் உறங்கி
வாழுமொருவனுக்கே வாழ்வு சித்திக்கும்.
அன்னைமண்ணின் சுகமிருக்கே...அது அலாதியானது.
எம்முந்தை எத்தனை தலைமுறையைத்
தாங்கியதித் தாய்மடி.
வயல்கள்,
வனங்கள்,
வீதிகள்,
வீடுகள்,
ஆறுகள்...அருவிகளென்று
பரம்பரையின் வேர்களைத் தாங்கியதல்லவா இம்மண்?
பெற்றவள் பெற்றுப்போட்டுவிட்டுப் போய்விடுவாள்
அள்ளி அணைத்தது எது?
கட்டியணைத்தது இந்தக் காதற்தேசம் அல்லவா?
காலையானதும் பறவைகள் எங்கெங்கோ பறக்கின்றன
மாலையானதும் கூடுதிரும்புகின்றனவே..... ஏன்?மேச்சலுக்குப்
போகின்றன மாடுகள்
அந்தியானதும்-வீடுதிரும்புகின்றனவே...ஏன்?
தனக்கொரு தாய்மடி இருப்பதென்பதும்,
அந்தமடியிற் தூங்குவது ஆனந்தமென்பதும்
அவைகளுக்குத் தெரியும்.
வளர்ப்புநாய் வீடுகாக்கிறது.
கோழிவந்தாற்கூடக் குரைக்கிறதே.....ஏன்?
இந்தவளவு எனதென்ற உறவின் உணர்வது
என்தேசத்துக் கள்ளிச் செடியெனினும்
எனக்கது கற்பகவிருட்சம்.
என்தேசம், சுடுபாலை வெளியெனினும்
எனக்கது இந்திரலோகம்.
காகமெனினும் என்னூரின் காகமெனில்
எனக்கது பஞ்சவர்ணக்கிளி.
இந்த உணர்வு எவனுக்குக் கைவருமோ
அவன் மனிதனேயல்ல...இறைவன்.
தாயகத்தைக் காதல் செய்பவன்...தேவன்.
சொந்தநாட்டில் உலவும்போது தலைகுனிவதில்லை.
வேறு எந்தநாட்டில் உலவும்போதும்
தலை நிமிர்வதில்லை.
மண்ணின் மடிபிளந்து மரம்வளர்கிறது
வளர்ந்ததும் நன்றிக்கடனாகக்
குடைபிடித்து நிழல் விரிக்கிறது.
தாயின் உடல்கீறி ஆறு பாய்கிறது
போகுமிடமெல்லாம் நன்றிக்கடனாகத்
தாகம் தணித்துச் செல்கிறது.
மண்ணிற் பிறந்ததுமுதல் இறக்கும்வரை
மனிதன் கிடக்கின்றான்.
நன்றிக்கடனாக என்னசெய்தான்?
ஒன்றுமில்லை.
தமிழனே!
தாய்கமேனியைக் கூறுகள்போட்டு வேலி அடைத்தவனே!
இன்றுன் தாய் கண்ணீர் வடிக்கிறாள்.
மாற்றான் உன்தாயின் மடியேறி மிதிக்கின்றான்.
முட்கம்பிச் சிறைக்குள்ளே வதைசெய்கின்றான்.
மேனிமயிர் பொசுங்கக் கொழுத்தி எரிக்கின்றான்.
புண்ணாகியுள்ளாள் அன்னை,
என்ன செய்யும் உத்தேசம்?
தன் தாயகத்துக்குக் காயமேற்படுத்தியவனை
வியட்னாம் மக்கள் விரட்டியடித்தனர்.
பிறந்தமண்ணைப் பொசுக்கியெரித்தவனைச் சீனமக்கள்
துரத்தியடித்தனர்.
தமிழனே!
பிறந்தமண்ணோடு பெரிய உறவுள்ளவனே!
கண்ணீரவிடுகின்றாள் உன் காதற்தாய்.
அழகுக்கு இலக்கணமானவள் எம்அன்னை.
மட்டுநகர்வாவி அவளின் மேனியின் அழகுத் தேமல்.
கோணமலைமுகடுகள் அவளின் கோலமார்புகள்.
வன்னிக்காடுகள் பரந்த கூந்தல் விரிப்பு.




*வியாசன்*

மன்னார் வயல்கள் முதுகுப்பரப்பு.
யாழ்ப்பாணம் அவளின் நெற்றிப்பொட்டு.
பேரெழிலோடிலங்கினாள் எம்பொன்மகள்.
கடல்கடந்து வந்தவரெம் தாயைச்
சிறையிருத்தினர்.
சிறையிருந்தபோதும் சிரித்தாளெம் தேவி.
பூனைக்கண்ணன்,
புகைக்கண்ணன்,
செங்கண்ணனென்று வந்து விலங்கிட்டனர்.
வந்தவரால் தங்கிநிற்க முடியவில்லை.
ஆத்தாள் பொறுத்திருந்து வென்றாள்.
இன்றுமெம் தாயைச் சிறைபிடிப்பேனென்று
பக்கத்துவீட்டுக்காரன் படைநடத்தி வருகின்றான்.
வீரமாதேவியுடன் விளையாட நினைத்துத்
தேரெடுத்து வருகின்றனர் சிறுவர்கள்.
கைவளையல்களைக் கழட்டி வைத்துவிட்டு
பண்டாரவன்னியனின் வாளெடுத்து நிற்கின்றாள் பத்தினி.
பக்கத்துணையாகப் பல்லாயிரம் வீரர்கள்.
இன்னும் கொஞ்சம் ஆட்பலம் வேண்டுமென்று
களத்திலிருந்து வந்துள்ளது கடைசிச் செய்தி.
உங்கள் வரவையும் எதிர்பார்த்திருக்கின்றாள்
தாயாள்.
கவசம் பூண்டெழுக தாயின் வேர்களே.
பனங்காமமண்ணை நெற்றியிலிட்டு
வணங்காமண்ணே எழுக.
எடுத்துவைக்கும் காலடி ஒவ்வொன்றுக்குள்ளும்
எதிரிக்குப் புதைகுழிவெட்டிப் புதைப்போம்.
ஈரம்வற்றாத வீரமண்ணின் தளிர்களே!
பணியோமெனப் பகைக்குணர்த்தும் தருணமிது.
தலைகுனிவாளா தாய்?
இல்லையெனக் கொதிப்புறுக இளையகுருதியே.. ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்